
# கச்சத்தீவு




செ. இராசு

T12117
R003K02
T.12117

# கச்சத் தீவு

ஆசிரியர்
முனைவர் புலவர். செ. இராசு
தலைவர், கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

வெளியீடு
கொங்கு ஆய்வு மையம்
பி-4, பல்கலைக்கழகக் குடியிருப்பு
தஞ்சாவூர் - 613 005.

இந்நூலின் பகுதியையோ, கருத்துக்களையோ எவ்வழியிலும் விரும்பியோர் கையாளலாம் ; மறுபதிப்புச் செய்யலாம். முன் அனுமதி பெறத் தேவையில்லை.

இந்நூல், நாட்டுப் பற்றாளர்; பழம்பொருள் ஆர்வலர்; நாணயத் தொகுப்பாளர்; புத்தக நண்பர்; நாமக்கல் உரவணிகர் திரு.என்.பி. இராமசாமி அவர்களின் கல்வெட்டில் பொறிக்கத்தக்க நன்கொடையால் வெளியிடப்படுகிறது.

V449
N7

நூல் கிடைக்குமிடம்

**கௌரி ராசு**

**கொங்கு ஆய்வு மையம்**

பி-4, பல்கலைக்கழகக் குடியிருப்பு,

தஞ்சாவூர் - 613 005.

**விலை : ரூ. 20/-**

அச்சிட்டோர் : சோழன் ஆப்செட் பிரிண்டர்ஸ்,

ஈரோடு.

## அறிமுக உரை

**பூ. அர. குப்புசாமி**
வழக்கறிஞர்
கரூர்.

இந்நூல் ஆசிரியர் முனைவர் புலவர் செ.இராசு அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்த ஒரு வரலாற்று ஆய்வாளர். அவர் தன்னகத்தே பலதுறை ஆற்றலையும் வைத்துள்ளார். சமூகஇயல், சமூகமானிடஇயல், வாழ்வியல், கல்வெட்டுத்துறை, சுவடிகள் சேகரிப்பு, ஆவணச் சேகரிப்பு, அவைகளை மெய்வருந்தி ஒழுங்குபடுத்தி வெளியிடல், கள ஆய்வு இப்படி எத்தனையோ சிறப்பியல்புகளைக் கொண்டவரவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல்துறைத் தலைவராக உள்ள அவர் இன்னும் பல துறைகளுக்குத் தலைமை தாங்கும் திறமை பெற்றவர்.

கச்சத்தீவுப் பிரச்சனையைப் பெரும்பாலான தமிழர்கள் அறிந்திருப்பர். அது இந்தியாவிற்கு - தமிழகத்திற்கு - மட்டுமே சொந்தம் என்பதையும் பலர் அறிந்திருப்பர். ஆனால், அது எப்படி நமக்குச் சொந்தம், அதைச் சிங்கள அரசுக்கு இந்திய அரசு தாரை வார்த்தது எவ்வளவு அக்கிரமமானது, தமிழகத்திற்கு முற்றிலும் விரோதமானது என்பதையெல்லாம் குறித்து ஏராளமான தமிழர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்நூல் ஆசிரியர் கச்சத்தீவு பற்றிய அனைத்துத் தகவல்களையும் அரும்பாடுபட்டுச் சேகரித்துள்ளார். கள ஆய்வு செய்துள்ளார். ஆபத்துக்களிடையே பிரயாணம் மேற்கொண்டுள்ளார். அதற்குமேலும் சென்று கச்சத்தீவை மீட்கும் பணியில் தன்னாலான செயல்களைவும் செய்துள்ளார். மேற்கொண்டு அதைத் தொடர தக்க துணை இல்லையே என தன் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

நடுவண் அரசு தமிழ்நாட்டிற்குச் செய்த பெரும் கேடு கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது ஆகும். இலங்கை சிங்கள இனவெறி, பௌத்தமத வெறி அரசை இந்திய அரசு ஆதரிப்பதால் கொழும்பு அரசு அங்குள்ள தமிழர்களை அடக்கி உரிமைகளைப் பறித்து, ஊரைவிட்டு ஓடச்செய்யும் கொடுமைகளைச் செய்கிறது. முப்பது லட்சம் தமிழர்களில் சில இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். பத்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள்

உயிர்காக்க வெளிநாடு சென்றுவிட்டனர். மீதமுள்ள தமிழர்கள் மீதும் முப்படைத் தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் எல்லையை மாற்றியமைத்தல், அதன் ஒரு பகுதியை வேற்று மாநிலத்திற்குத் தரல் முதலிய உரிமைகளை மத்திய அரசுக்குத் தரப்பட்டுள்ளது. இது தொடர்பான அரசியலமைப்புச் சட்ட ஷரத்துக்கள் மத்திய அரசுக்கு முழு அதிகாரம் வழங்குகின்றன.

அப்படி மாற்றங்கள் செய்யும்போது அல்லது ஒரு மாநிலத்தின் ஒரு பகுதியை மற்றொரு மாநிலத்திற்கு அளிக்கும்போது அந்த மாநிலத்தின் கருத்தை மத்திய அரசு கேட்கலாம். ஆனால், அதற்குக் கட்டுப்பட வேண்டியதில்லை என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் தெளிவாகவே கூறுகிறது.

கச்சத்தீவு விஷயத்தில் தமிழ்நாடு ஒற்றுமையாக இருந்து மத்திய அரசை எதிர்த்துப் போராடி இருந்தால் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால், அன்றுமுதல் இன்றுவரை இங்குதான் ஒற்றுமை என்பது குதிரைக் கொம்பாக இருக்கிறதே!

நேரு அவர்கள் பெருபாரி பகுதியை வங்காள தேசத்திற்கு மாற்றிக் கொடுத்தபோது எந்தப் பேதமுமின்றி வங்காளம் கொதித்தெழுந்தது. மேற்கு வங்காள முதல்வர் பி.சி. ராய் அவர்களை தன்னை வந்து சந்திக்கும்படி நேரு கேட்டுக்கொண்டார். அவர் வர முடியாது என மறுத்து விட்டார். பிறகு பல தூதர்கள் மூலம் அவரைச் சமாதானப்படுத்தி அந்தப் பிரதேசத்திற்கு விலையாக மத்திய அரசு மேற்கு வங்க அரசுக்கு .ரூ.3 கோடி நட்ட ஈடு கொடுத்தது.

ஆனால், அய்யகோ! தமிழகத்தின் பிரதேச உரிமைகள், நீர் உரிமைகள் மற்றும் பிற எத்தனையோ உரிமைகள் எல்லாம் தொடர்ந்து தட்டிப் பறிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும்போதுகூட இன்றைக்கும் தமிழ்நாட்டுத் தலைவர்கள் ஒருவருக்கொருவர் விரோதம் காட்டுவது சாதிப் பிணக்குகள் அதிகமாவது காரணமாக நடுவண் அரசு தொடர்ந்து தமிழர்களின் உரிமையைப் பறிக்கும் துயர நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. எத்தனையோ மாநிலங்களில், கட்சிச்சண்டை, சாதிச்சண்டை போன்றவை இருந்தாலும் அந்த மாநில உரிமைகாக்க அவர்கள் ஒற்றுமையாக, குறிப்பாகக் கட்சித் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்திய அரசை

எதிர்த்து ஒற்றுமைக்குரல் கொடுப்பதனால் கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலத்தினர் தங்கள் மாநில வளப்பங்களைக் கட்டிக் காப்பதும், உரிமைகளை விட்டுக் கொடாமல் போராடுவதுமாக இருந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் படுபலவீனமான இச் சூழ்நிலை காரணமாகத்தான் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே இருக்கின்ற மங்கலாதேவி ஆலயம் என்று அழைக்கப்படுகின்ற கண்ணகி கோட்டத்தைக் கேரள அரசு ஆக்கிரமித்துக்கொண்டு சித்திரா பவுர்ணமி விழாவிற்கு அங்கு செல்லும் தமிழர்களைத் துன்புறுத்துகிறார்கள். ஆனால், அவ்விடம் முற்றிலும் தமிழக எல்லைக்குள்தான் இருக்கிறது என்பதற்குரிய அனைத்து ஆவணங்கள் கொண்ட கோப்புகள் தமிழகத் தலைமையகத்திலேயே இருக்கின்றன. ஆனால், என்ன பயன்?

தமிழகத்தில் கட்சிகளுக்குப் பஞ்சமில்லை; தலைவர்களுக்கும் பஞ்சமில்லை. ஆனால், நாளும், நாளும் பறிபோய்க் கொண்டிருக்கின்ற தமிழக உரிமைகளைக் காப்பதற்கான முயற்சிகளுக்குத்தான் பஞ்சம்!

இந்த வகையில் தமிழக உரிமைகளில் ஒன்றான கச்சத்தீவைப் பற்றிய இந்நூலைப் படிக்கும் தமிழர்களிடையே இழக்கப்படும் தமிழர்கள் உரிமையை மீட்கவேண்டும் என்ற உணர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமையும்; அமையவேண்டும் என்று விரும்புகிறேன்.

'வாராது போல வந்த' தமிழர்தம் மொழி, இன, நாட்டு உணர்வுகளையும், அமைப்புகளையும் போற்றி வளர்த்து, தமிழக உரிமைகள் 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலாவது மீட்கப்படுமாக! அத்தகைய பெரும் பயணத்தின் தொடக்க முயற்சிகளில் ஒன்றாக இந்நூல் அமைகிறது என்பதில் ஐயமில்லை. நூலாசிரியர் முனைவர் புலவர் **செ. இராசுவிற்கு** என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள்.

## ஆசிரியர் உரை

**கச்சத்தீவு** நாளிதழ்களில் அடிக்கடி காணக்கூடிய சொல. அரசியல். தலைவர்கள் பலர் தொடர்ந்து விவாதிக்கும் பிரச்சனைக்குரிய பெயர். தாய்த் தமிழ்நாட்டின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி. தமிழ் மண்ணான கச்சத்தீவை இலங்கைக்கு அளித்து 23 ஆண்டுகள் ஓடிவிட்டன.

சேதுபதி அரசர்கட்குச் சொந்தமான கச்சத்தீவை இலங்கைக்கு அளித்ததால் தமிழகக் கிழக்குக் கடற்கரை மீனவர்கள் வாழ்வில் இடி விழுந்தது. தமிழ் மீனவர்கள் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பில்லை. இலங்கைக் கடற்படையின் வெறித்தனத்தால் நாளும் நாளும் நமது மீனவர்கள் தொல்லைகள் பல உற்று வருகின்றனர். தமிழக வேண்டுகோளுக்கு உரிய மரியாதையை மைய அரசு கொடுப்பதில்லை.

இலங்கைக் கடற்படையினரின் அடாவடித் தனத்தை இலங்கை அரசு அங்கிகரிக்கிறது. அதே நேரத்தில் தமிழகக் கடல் எல்லைக்குள் வரும் இலங்கை மீனவர்கள் மீது இந்தியக் குண்டு ஒன்று கூடப் பாய்வதில்லை. உரிய மரியாதையுடன் அவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

எதிர்காலத்தில் இந்தியப் பாதுகாப்பிற்குப் பேராபத்து கச்சத்தீவின் வழியாக வரலாம். எனவே, கச்சத்தீவு பற்றி இலங்கையுடன் செய்துகொண்ட 1974, 1976 ஒப்பந்தங்களை இரத்து செய்து கச்சத்தீவை இந்திய அரசு தன் உரிமையாக்கிக் கொள்வது மிகமிக அவசியம்.

இவ்வகையில் இந்திய அரசைத் தூண்ட தமிழகம் தயாராக வேண்டும். கச்சத்தீவு தமிழக மண்ணுக்குரியது; இந்தியாவின் ஒரு பகுதி, ஒருநாளும் அது இலங்கைக்கு உரியதாக இல்லை என்பதை இந்நூல் தெளிவாக விளக்குகிறது.

நண்பர் செம்பியன் அவர்கள் கச்சத்தீவு பற்றி எழுதிய நூல் இரண்டு பதிப்புக்களைப் பெற்றது. அவருடைய பல கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவருக்கு என் நன்றி.

1974இல் ஈரோட்டில் கச்சத்தீவுக் கருத்தரங்கம் நடத்திய நாளிலிருந்து இந்நூல் வெளியிடவேண்டும் என்ற அவா நண்பர் கரூர் வழக்கறிஞர் திரு.பூ.அர. குப்புசாமி அவர்கள் தூண்டுதலாலும், நாமக்கல் நண்பர் திரு. என்.பி. இராமசாமி அவர்கள் கொடையாலும் இப்போது வெளிவருகிறது.

கச்சத்தீவு பற்றித் தமிழக முதல்வர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் அண்மையில் சில நல்ல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என மீனவர் தொடர்பாக அவர் பேசிய உரை ஆறுதல் அளிக்கிறது.

கச்சத்தீவை மீட்கும் நல் முயற்சியில் தமிழக மக்களைத் தூண்ட ஒரு தூண்டுகோலாக இந்நூல் அமையும் என்பது என் எண்ணம்.

இந்நூல் உருவாக்கத்திற்கு உதவிய ஈரோடு சோழன் அச்சகத்தினருக்கு என் நன்றி.

தஞ்சாவூர்<br>7-2-97

அன்பன்<br>**செ. இராசு**

# கச்சத் தீவு

**தாரை வார்ப்பு**

1947இல் பெற்ற விடுதலைக்குப்பின் வங்கதேசப் போர் ஒன்றைத் தவிர இந்தியா சந்தித்த போர்கள் எல்லாம் எல்லை பற்றிய போர்களேயாகும்.

இப்போர்களின் விளைவாகச் சீனாவிடமும், பாக்கிஸ்தானிடமும் நாம் சில எல்லைப் பகுதிகளை இழந்தோம். அப்பகுதிகள் இன்னும் சர்ச்சைக்குரிய பகுதிகளாகவே உள்ளன. தீர்வு ஏற்படவில்லை. ஆனால், போர் ஒன்றும் செய்யாமல் அமைதியாக ஒரு குண்டுகூட வெடிக்காமல் இந்திய நாட்டின் பூர்வீகப் பரம்பரைச் சொத்தான ஒரு பகுதியை அன்னிய நாட்டுக்கு அர்ப்பணித்து விட்டோம்.

சேதுபதி அரசர்கட்கு உரித்தான இராமநாதபுரம் மாவட்டம் பாக் நீரிணைப்பில் உள்ள தமிழக மண்ணான கச்சத்தீவை இந்திய அரசு ஒரு காரணமும் இல்லாமல் 1974 சூன் மாதம் இலங்கைக்குத் தாரை வார்த்துவிட்டது.

1974 இல் இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்க்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முன்பு சம்பிரதாயத்துக்குக்கூட தமிழக அரசிடம் முறைப்படி ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை.

அப்போது தமிழக முதல்வராக விளங்கிய கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்திய அரசு எடுத்த இந்த முடிவைக் கடுமையாக எதிர்த்தார். தமிழக சர்வ கட்சிக் கூட்டத்தை நடத்தினார். தம் அமைச்சரவையில் அதுபற்றி விவாதித்தார். சட்டசபையில் ஒருமனதாக கச்சத்தீவு அளிக்கப்பட்டதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றினார். கச்சத் தீவைத் திரும்பப் பெறவேண்டும் என்று வேண்டுகோள் கலைஞர் அவர்களால் விடுக்கப்பட்டது. வருடம் 23 ஆகியும் காலம் கனியவில்லை.

1974 இல் இலங்கைக்குக் கச்சத் தீவை அளிக்கும் ஒப்பந்தம் கையெழுத்தான பின்பு அந்த ஒப்பந்தம் தொடர்பான அறிக்கை ஒன்றை மக்களவையில் தாக்கல் செய்யும் சடங்கை நிறைவேற்ற வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்வரண்சிங் எழுந்த போது தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொதித்தெழுந்தனர்.

நாஞ்சில் மனோகரன், இரா. செழியன், மூக்கையாத் தேவர் போன்ற தமிழக உறுப்பினர்கள் பலரும் ஒப்பந்தத்தைக் கடுமையாகக் கண்டித்தபின் வெளிநடப்புச் செய்தனர். அதன்பிறகு அமைச்சர் அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

''இரு நாடுகளுக்கிடையே பிரச்சினை தோன்றினால் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே அரசின் நிலை. அதனால், கச்சத்தீவு விவகாரம் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்திற்கோ, நடுவர் சமரசத்துக்கோ நாங்கள் செல்லவில்லை'' என்று கூறிய அமைச்சர் ஸ்வரண்சிங் ஒப்பந்தப்படி கச்சத்தீவைக் கொடுத்தது சரி என்றார்.

ஆனால், கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமானாலும் 1921 ஆம் வருடத்திய மீன் பிடிப்பு ஒப்பந்தப்படி தமிழக மீனவர்கள் கச்சத்தீவுப் பகுதிக்குச் சென்று மீன்பிடிக்கலாம்; அதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு என்று அமைச்சர் கூறினார். அந்தோணியார் விழாவிற்குச் செல்லும் யாத்ரிகர்கட்கும் கச்சத்தீவு செல்ல உரிமையுண்டு என்றார்.

1974 ஜூன் 23 ஆம் நாள் இந்திய-இலங்கைப் பிரதமர்களால் கச்சத்தீவு பற்றிய ஒப்பந்தம் கையெழுத்தானபின் இரு நாடுகட்கிடையே மீன் பிடிப்பு உரிமை பற்றிய கடிதப் போக்குவரத்து நடந்தது. இந்தக் கடிதங்களே 1976 மார்ச்சு மாதம் ஒப்பந்தங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

1976 ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்த இரண்டாம் ஒப்பந்தத்தின்படி கச்சத்தீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமை அடியோடு பறிக்கப்பட்டது.

இக்கடிதங்கள் ஒரு நாட்டின் எல்லைக்குள் மற்றொரு நாட்டின் மீன் பிடிக்கும் படகுகளோ, மீனவர்களோ செல்லக்கூடாது என்று தெளிவுபடுத்தியது. அந்தோணியார் விழாவுக்குச் செல்லும் தமிழக யாத்ரிகர் வழிபாட்டு உரிமையும் பறிக்கப்பட்டது.

1974 ஆம் வருட ஒப்பந்தம் கச்சத்தீவை இலங்கைக்கு அளித்தது; 1976 ஆம் வருட ஒப்பந்தம் கச்சத்தீவுப் பகுதிக்குத் தமிழக மீனவர்கள் செல்லக்கூடாது; கச்சத்தீவு அந்தோணியார் திருவிழாவுக்கு மக்கள் செல்லக்கூடாது என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. 1974 ஒப்பந்தத்துக்கு நாடெங்கும் எதிர்ப்புக்குரல்

கிளம்பியது உண்மைதான். ஆனால், 1976 நெருக்கடி நிலைக் காலம். சவான் அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் விவாதம் கூட நடக்கவில்லை. தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதிர்ப்புப் பலமாக இல்லை.

**கச்சத்தீவின் இருப்பிடம்**

இராமேசுவரத்திலிருந்து சுமார் 17 கி.மீ. வடக்கில் ஆள் அரவம் இல்லாத உயரம் குறைவான ஒரு குட்டித் தீவுதான் கச்சத்தீவு. இலங்கையைச் சேர்ந்த சைவப் புலவர் உடுப்பிட்டி கதிர் தணிகாசலம் கச்சத்தீவு இலங்கை நெடுந்தீவிலிருந்து 18 மைல் தொலைவிலும், இராமேசுவரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் உள்ளது என்று நேரில் கண்டு கணித்து எழுதியுள்ளார். பறவை ஒலிகளும், கடல்அலை ஒலியும், மரங்கள் அசைவினால் ஏற்படும் ஒலியும் தவிர அங்கு வேறு ஒன்றையும் கேட்க முடியாது. கச்சத்தீவை ஒருவகையில் அமைதித்தீவு எனலாம். அமைதித் தீவுதான் பலசமயம் புயலைக் கிளப்பியது.

கோழி முட்டை வடிவிலான அத்தீவு பாக் நீரிணைப்பில் உள்ளது. இந்திய அளவைத் துறையினர் அத்தீவிற்குக் கச்சத்தீவு தெற்கு, கச்சத்தீவு வடக்கு என்று இரண்டு பகுதிகளாகப் பெயரிட்டுள்ளனர். ஆம்; இந்திய அளவைத் துறையினர் 1874, 1895, 1930 ஆம் ஆண்டுகளில் கச்சத்தீவை அளந்து இந்திய வரைபடத்தில் நமது நாட்டின் ஒரு பகுதி என்று தெளிவாகக் குறித்துள்ளனர்.

பசுமையான அத்தீவின் கரையோரங்களில் உயரம் குறைந்த பாறைகள் மிகுதி. உள்ளே சில மணல் குன்றுகளும், சில குழிகளும், புதர்களும் உள்ளன. அத்தீவு சுமார் 1.5 கிலோ மீட்டர் நீளமும், 350 மீட்டர் அகலமும் உடையது.

கச்சத்தீவின் பரப்பளவு 285.2 ஏக்கர் ஆகும். அத்தீவு இராமநாதபுரம் சேதுபதி அரசர்களுக்குப் பரம்பரை பரம்பரையாக உரியது; இராமேசுவர நகரியத்தின் ஒருபகுதி என்பதை எண்ணற்ற ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**பெயர்க்காரணம்**

கச்சத்தீவு என இத்தீவு பெயர் பெற்றதற்கு ஐந்து வகையான காரணங்கள் கூறப்படுகின்றன.

கச்சத்தீவு வளம் நிறைந்தது ; அதன் பசுமை நிறம் வளத்தைக் காட்டும். அதனால் **'பச்சைத் தீவு'** என முன்பு வழங்கிய பெயர்தான் பிற்காலத்தில் கச்சத்தீவு என்றாயிற்று.

**கச்சன்-கச்சம்** என்பது ஒரு வகை ஆமையின் பெயர். தமிழ்ப் பேரகராதி இதனை விளக்குகிறது. இங்கு ஆமைகள் மிகுதியாக வாழும் காரணத்தால் இது கச்சத்தீவு (ஆமைத்தீவு) என்று பெயர் பெற்றது.

**கச்சா-கச்சு-கச்சம்** என்பது இப்பகுதியில் மிகுதியாகக் கிடைக்கும் ஒருவகைச் சிறு மீனுக்கு வழங்கும் பெயர். அதனால்தான், இத்தீவு கச்சத்தீவு என்று பெயர் பெற்றது.

கச்சதீவில் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. கச்ச- கச்சுப்போன (கெடுதல் அடைந்த-அசுத்தமான) தண்ணீர் இங்குக் கிடைக்கும் காரணத்தால் இத்தீவு கச்சத்தீவு என்று பெயர் பெற்றது. இதன் அருகில் உள்ள தீவொன்று **''நல்ல தண்ணித் தீவு''** என்று பெயர் பெற்றுள்ளது.

கச்சா என்பதற்குத் தாழ்ந்த என்றும் பொருள் கூறப்படுகிறது. தாழ்ந்த-உயரமில்லாத தீவு என்னும் பொருளிலும் இப்பெயரைப் பெற்றிருக்கலாம்.

இப்பெயரின் மூலமாகக் கச்சத்தீவு வளமானது ; மீன்வளம் மிகுந்தது; ஆமைகள் மிகுதியாக வாழுமிடம் ; தண்ணீர் ஊற்றுக்கள் உள்ள இடம்; தாழ்வானது என்பது புலப்படுகிறது. ஏற்ற காரணம் எது என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை.

**கச்சத்தீவின் வளம்**

கச்சத்தீவு பாலைவனம்-பாறைகள் அடர்ந்தது- ஒன்றுக்கும் உதவாத நிலம் என்று அரசியல்வாதிகளால் கூறப்பட்டது. இந்தியப் பாராளுமன்றத்தில் ஆளுவோரால் பலமுறை இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் கோபத்தைக் குறைப்பதற்காகச்

சொல்லிய பொய்யான உரைகளே தவிர இதில் சற்றும் உண்மையில்லை. இவ்வாறு கூறியவர்கள் அனைவரும் கச்சத்தீவைப் பார்க்காதவர்கள்; அதைப்பற்றி ஒன்றும் அறியாதவர்கள்.

கச்சத்தீவு மிகவும் வளமானது. முதலில் குறிப்பிடத்தக்கது அதன் மீன்வளம். உலகில் பால்கன் நீரிணைப்பு மீன்வளம் மிக்கது என்று கூறுகிறார்கள். அதற்கு அடுத்தது கச்சத்தீவுப் பகுதியே மீன்வளம் மிக்கது என்பது பலருடைய கருத்து. திருவாடானை, முதுகுளத்தூர், இராமநாதபுரம் வட்ட மீனவர்கள், கச்சத்தீவுப் பகுதியில் பரம்பரை பரம்பரையாகவே மீன் பிடித்தனர். உலகக் கடல் சீவராசிகள் தமிழகக் கடலை நோக்கி வருகின்றன என்பர். அவ்விடம் கச்சத்தீவே!

கச்சத்தீவில் கல்லுமலை என்ற பகுதிக்கு அருகில் உள்ள பள்ளத்தில் முன்பு நல்ல தண்ணீர் கிடைத்துள்ளது. சிலர் அங்கு வந்து அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி நெல் பயிரிட்ட அடையாளம் இன்றும் அங்கு காணப்படுகிறது.

இராமநாதபுரம் மரைக்காயர்களும், வேறு சிலரும் கச்சத்தீவை இராமநாதபுரம் சேதுபதி அரசர்களிடமிருந்து குத்தகைக்கு ஏலத்தின் மூலம் எடுத்துள்ளனர்; எடுத்து இங்கு சாயவேர் சேகரித்துள்ளனர். கற்றாழை, கள்ளி, பனை, தென்னை, கோரை, சில கிழங்கு வகைகள் (வீணாரைக் கிழங்கு, அல்லைக் கிழங்கு), மூலிகை வகைகள் (பவளநந்தி, உமரி) ஆகியவைகளும் இங்கு ஏராளமாகக் கிடைக்கின்றன.

சுண்ணாம்பு, சிமெண்ட் தயாரிக்கப் பயன்படும் ஓடக்கல் (கால்சியம் கார்பனேட்) என்னும் ஒருவகைக் கற்கள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. சங்குகளும், முத்துக்களும் கிடைக்கின்றன. கச்சத்தீவில் பெட்ரோல் கிடைக்க வாய்ப்புள்ளதாக 19.12.1973இல் இந்தியன் எக்ஸ்பிரசும், 1.4.1973இல் இலங்கை தினகரனும் செய்திகளை வெளியிட்டுள்ளன. 17.8.1991 தினமணி தலையங்கத்திலும் கச்சத்தீவுப் பகுதியில் பெட்ரோல் கிடைக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது. சோவியத் ரஷியாவின் ஆய்வுப்படி தனுஷ்கோடி-கச்சத்தீவுப் பகுதிகளில் எண்ணெய்வளம் இருப்பது கண்டறியப்பட்டு 1992இல் அறிவிக்கப்பட்டது.

ஆள் இல்லாத் தனித் தீவான கச்சத்தீவு எவ்வளவு இயற்கைச் செல்வங்களைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது என்பதை அறியலாம். வெறும் நிலப்பகுதியை மட்டும் அல்ல; எண்ணற்ற வளங்களைக் கொண்ட தன் பூமியை அல்லவா கச்சத்தீவைக் கொடுத்ததால் இந்தியா இன்று இழந்துள்ளது.

### சேதுபதியின் சீமை

கி.பி. 1605இல் சேதுபதி அரச மரபு மதுரை நாயக்க மன்னர்களால் ஏற்படுத்தப்பட்டது. **சேதுபதி அரசர்கட்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதியில் கச்சத்தீவும் அடங்கியிருந்தது.** முதல் அரசர் முதலாம் சடைக்கத் தேவர் என்ற உடையான் சேதுபதி (1605-1621) ஆவார்.

கி.பி. 1609இல் சாலிவாகன சகம் 1531 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட சேதுபதியின் செப்பேட்டில் தலைமன்னார் எல்லைவரை சேதுபதி ஆட்சிக்குட்பட்டது என்று கூறப்படுகிறது.

ஒரு ஆவணத்தில் சேதுபதிக்குரிய கடற்கரை ஊர்கள் 69; தீவுகள் 8 எனக் குறிக்கப்பட்டுள்ளது. **சேதுபதி அரசர்கட்குரிய எட்டுத் தீவுகளில் கச்சத்தீவும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.**

சேதுபதிக்குரியது இராமேசுவரம் இராமநாதசுவாமி-மலைவளர் காதலி அம்மை ஆலயம். அவ் ஆலயத்துக்குரிய மலர்கள் முன்பு கச்சத்தீவிலிருந்து வந்துள்ளன.

இராமேசுவரம் கோயிலுக்கு அடியார்களால் கொடையாக அளிக்கப்பட்ட கால்நடைகள் (ஆடு, மாடு, எருமைகள்) கச்சத்தீவில் மேய்ச்சலுக்கு விடப்பட்டுள்ளன. அவற்றின் பால் முதலிய பஞ்சகவ்யங்கள் கச்சத்தீவிலிருந்து இராமேசுவரம் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இவைபற்றி 1.4.1975 அன்று வெளிவந்த இலங்கை தினகரன் ஏட்டில் விரிவான செய்திகள் காணப்படுகின்றன.

தாயுமானவர் (1706 - 1744) காலத்தில் இலங்கையின் வடபகுதியில் அதிகாரம் செலுத்திய டச்சுக்காரர்கள் தம் படையுடன் இராமேசுவரம் பகுதிக்கு வந்தனர். தாயுமானவர் படை திரட்டிச் சேதுபதி மன்னருக்கு ஆதரவாக டச்சுக்காரர்களைக் கச்சத்தீவுக்கு அப்பால் விரட்டினார். கச்சத்தீவுவரை சேதுபதி அரசர்க்கு உரிமை என்று அதனால் உறுதியாக அப்போது நிலைநாட்டப்பட்டது.

கி.பி.1605 ஆம் ஆண்டு தொடங்கிய சேதுபதி அரசர் ஆட்சி முடிந்து 1803 முதல் இராமநாதபுரம் ஜமீன்தாரி முறை கொண்டுவரப்பட்டது. முதல் ஜமீன்தாரினி ஆக ராணி மங்களேசுவரி நாச்சியார் (1803-1812) நியமிக்கப்பட்டார்கள். சேதுபதிகள் ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட ஜமீன்தார்கள் ஆயினர். அப்போது, அளிக்கப்பட்ட ஜமீன்தாரி நில உரிமைச்சட்டப்படி கச்சத்தீவு சேதுபதிகட்கு உரித்தாக எழுதித் தரப்பட்டது.

இதை உறுதிப்படுத்தும் வண்ணம் ''**இஸ்திமிரார் சன்னத்**'' அளிக்கப்பட்டது. அது ஜமீன்தார்களின் நில உரிமைப் பட்டயமாகும். இதன்படி கிழக்கிந்தியக் கம்பெனியார் 1822இல் இராமநாதபுரம் சேதுபதி மன்னரிடமிருந்து கச்சத்தீவை அனுபவிக்கும் உரிமையைக் குத்தகையாகப் பெற்றனர்.

விக்டோரியா மகாராணி தம் பிரகடனத்தில் கச்சத்தீவின் உரிமை இராமநாதபுரம் சேதுபதிகட்கே உண்டு என்றறிவித்தார். இலங்கை அமைச்சரவைச் செயலாளர் பி.பி.பியரிஸ் என்பவர் 1936-40ஆம் ஆண்டுகளில் தாம் உதவி அரசு வரைவாளராக இருக்கும்போது ஆவணங்களைப் பார்வையிட்டதாகவும் விக்டோரியா அரசியின் இவ்வாறான பிரகடனத்தைப் பார்வையிட்டுக் கச்சத்தீவு இலங்கைக்கு உரியது அல்ல; சேதுபதிக்கே உரியது என்று கண்டதாகவும் அவ்வாறே வரைபடம் வரைந்ததாகவும், தாம் அரசுத் துறைச் செயலாளராக இருக்கும்போது 1966ஆம் ஆண்டு மே 8ஆம் நாள் கொழும்பில் அறிவித்தார். இச்செய்தி விரிவாக 9-5-1966 '**இந்தியன் எக்ஸ்பிரஸ்**' இதழில் வெளிவந்துள்ளது.

ஜமீன் நிலஉரிமைச் சட்டப்படி 20க்கும் மேற்பட்ட தீவுகள் கரையோரக் கிராமங்களுடன் நிருவாக வசதிக்காக இணைக்கப்பட்டன. அதன்படிக் கச்சத்தீவு இராமேசுவரக் கிராமத்துடன் இணைக்கப்பட்டது. இந்நிலை அண்மைக்காலம் வரை நீடித்தது.

இராமேசுவரம் நகரியத்தின் ஒருபகுதியாகவும், இராமேசுவரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்குள் உட்பட்ட பகுதியாகவும் கச்சத்தீவு இருந்தது. ஒருசமயத்தில் இராமேசுவரம் நகரியக் குழுவினர் கச்சத்தீவில் காடு வளர்க்கும் திட்டத்தை மேற்கொள்ள முனைந்தனர். பின்னர் இத்திட்டம் கைவிடப்பட்டது.

23-6-1880ஆம் வருடம் இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்த 8 கிராமங்களையும், கச்சத்தீவு, குத்துக்கால் தீவு, மன்னாளித் தீவு, முயல் தீவு ஆகிய 4 தீவுகளையும் சாயவேர் சேகரிக்க இராமநாதபுரம் கலெக்டர் எட்வர்டு டர்னர் அவர்களிடமிருந்து கீழக்கரை சாயபு மாப்பிள்ளை மரைக்காயர் மகன் ஜனாப் முகம்மது அப்துல் காதர் மரைக்காயர் அவர்களும், இராமசாமிப்பிள்ளை மகன் முத்துசாமிப்பிள்ளையும் கூட்டாக வருடம் ஒன்றுக்கு ரூபாய் 700க்குக் குத்தகைக்கு எடுத்தனர். அதற்குரிய பத்திரம் இராமநாதபுரம் பதிவு அலுவலகத்தில் 2-7-1880 அன்று பதிவாகியது (பதிவு எண்.510 - ஆண்டு 1880; புத்தகம் 1,16 ஆம் வால்யூம்).

4-12-1885 அன்று இராமநாதபுரம் சேதுபதி அரசரின் எஸ்டேட் மேனேஜர் டி.ராஜா ராமராயர் அவர்களிடமிருந்து இராமநாதபுரம் இராமசாமிப்பிள்ளை மகன் முத்துசாமிப்பிள்ளை என்பவர் சாயவேர் சேகரிக்கக் கச்சத்தீவு அடங்கிய பகுதியை ஆண்டுக் குத்தகை ரூ.215க்குப் பெற்றார். (பதிவு எண் 134-ஆண்டு 1885). இதற்கான பதிவு இராமநாதபுரம் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு ஆவணங்களிலும் 'பாம்பன், முதுகுளத்தூர், திருவாடானை சப் டிஸ்ட்ரிக்குச் சேர்ந்த சாலைக்கார வட்டகை என்ற ஆற்றங்கரை, இராமேசுவரம், ஏர்வாடி, திருப்பாலைக்குடி வகையறாவிலும் அதற்குள் அடங்கிய தீவுகளும், என்று கூறப்படுவதிலும் கச்சத்தீவு ஒன்றாக மிகவும் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

கச்சத்தீவில் விறகு, பூ, மீன், சங்கு, முத்து, புல்வகை, சாயவேர், மருந்து மூலிகைகள் ஏராளமாகக் கிடைத்ததால் இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் திவான் அலுவலகத்தில் கச்சத்தீவின் வருவாயைக் கவனிப்பதற்கென்றே ஒரு கணக்கர் நியமிக்கப்பட்டிருந்தார்.

1911இல் வெளியிட்ட இராமநாதபுரம் சேதுபதிகட்குரிய சமஸ்தானப் பட்டியலில் கச்சத்தீவு குறிக்கப்பட்டுள்ளது.

1-7-1913 முதல் சென்னை மாகாண அரசு பாக் நீரிணைப்பில் உள்ள கச்சத்தீவு சூழ்ந்த பகுதிகளையும், பிற தீவுகளைவும் இராமநாதபுரம் சேதுபதி அவர்களிடமிருந்து நீண்டகாலம் குத்தகைக்குப் பெற்று மீனவர்கட்கு மீன்பிடிக்க வழங்கியுள்ளது.

*1913 முதல் 1928 வரை சங்கு சிப்பி மீன்வளத்துறை மீனவர்கட்குக் குத்தகைக்கு விட்ட இடங்களில் கச்சத்தீவும் ஒன்று. இராமநாதபுரம் சேதுபதியிடமிருந்து அரசு பெற்று மீனவர்கட்குக் குத்தகைக்கு விட்டுள்ளனர். சிலமுறை சேதுபதி சார்பில் அவருடைய அலுவலர்கள் நேரடியாகக் குத்தகைக்கு விட்டுள்ளனர் என்றும் தெரிகிறது. 1936இல் குத்தகை விதிகள் புதுப்பிக்கப்பட்ட போதும் கச்சத்தீவு குத்தகை இடங்களில் ஒன்றாக இருந்தது. இக்கால கட்டத்தில் இந்திய அரசுச் செயலாளர் சேதுபதி அரசர்களிடமிருந்த கச்சத்தீவைக் குத்தகைக்குப் பெற்றதை ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.*

*அதன்படி தொண்டி, நம்புதாழை ஆகிய ஊர்களைச் சேர்ந்த மீனவர்கள் பலர் கச்சத் தீவுப் பகுதியைச் சென்னை மாநில அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்குப் பெற்றனர். சென்னை மாநில மீன்வளத்துறை உதவி இயக்குநரிடமிருந்து இதற்கான ஆணையைப் பெற்றுள்ளனர் (தேதி 2.11.1943 எண் 15-1943-44)*

*19.2.1922இல் இராமநாதபுரம் திவான் ஆர்.சுப்பையநாயுடு அவர்கள் ஆர். ராஜேஸ்வர சேதுபதி அவர்கட்கு இராமநாதபுரம் ஜமீன் கடல் எல்லைகள் பற்றி எழுதி அளித்ததில் கச்சத்தீவு பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. இதைப் பார்த்துச் சேதுபதி அரசர் அவர்கள் 27.2.1922 இல் இசைவு ஏற்பு* (ENDORSMENT) *அளித்துள்ளார்.*

*தூத்துக்குடி முத்து & மீன்வளத்துறையின் உதவி இயக்குநர் ஆணைப்படி 1943இல் ஆர்.கணேசன் என்பவர் தயாரித்த தமிழக அரசின் வரைபடத்தில் கச்சத்தீவு தமிழ்நாட்டின் பகுதியாக இடம் பெற்றுள்ளது.*

*1.7.1947 முதல் 30.6.1949 வரை (பசலி 1356 முதல் 1358 வரை) இராமநாதபுரம் சேதுபதி ஆர்.சண்முகராஜேஸ்வரசேதுபதி அவர்களின் அதிகாரம் பெற்ற திவான் வி.பொன்னுசாமிப்பிள்ளை அவர்களிடமிருந்து கே.எஸ்.முகம்மது மீரசா மரைக்காயர் கச்சத்தீவைக் குத்தகைக்கு எடுத்தார். நாள் 26.7.1948 ஆகும். ஆண்டுக் குத்தகை 23 ரூபாய் 2 அணா. இக் குத்தகை (எண் 278 - 1948) பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில்* ***இராமநாதபுரம் ஜில்லா ராமேஸ்வரம் சப் ரிஜிஸ்திரேசனுக்குட்பட்ட தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே இருக்கும் சமஸ்தானத்துக்குப் பாத்தியமான கச்சத்தீவு*** *என எழுதப்பட்டுள்ளது.*

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள எல்லா ரிஜிஸ்திரார் அலுவலகத்தின் பதிவு எல்லைகளைக் குறிக்கும் பெரிய நூலில் 107ஆம் பக்கம் இராமநாதபுரம் ஜமீன்தாரி கிராமங்களைக் குறிக்கும் பட்டியலில் தனுஷ்கோடியின் உட்கிராமமாகக் கச்சத்தீவு குறிக்கப்பட்டுள்ளது. இந்நூல் 1.1.1966 அன்று சென்னை மாகாண அரசால் வெளியிடப்பட்டது.

18 ஆம் நூற்றாண்டில் (1767) முத்துக்குளிக்கும் சில கடற்கரைக் கிராமங்களைப் பெற்ற சேதுபதி அரசர் மன்னாரிலிருந்து பாம்பனுக்கு டச்சுக் கப்பல்கள் வர அனுமதித்தார். டச்சுக் கப்பல் வரும் இடங்களில் ஒன்றாகக் கச்சத்தீவு குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்தவர்கள் எவர் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் கச்சத்தீவுக்கு வரலாம் ; டச்சுக்காரர் தடுக்கக் கூடாது என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்மூலம் சேதுபதிகளின் கச்சத்தீவு உரிமை நிலைநாட்டப்பட்டது.

இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் ஆட்சிச் செயலர் 20.4.1950 அன்று எஸ்டேட் மேலாளருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் (எண் 445 - ஏ2 - 1950) கச்சத்தீவு பற்றியும், 1929-45 ஆண்டுகளில் அரசு மீன்பிடித்துறை குத்தகைக்கு ஏற்று அனுபவித்தது பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நெல்லிமலைத் தோட்டத்தில் உள்ள சோலைமலை ஆசாரி என்பவர் தாம் எழுதிய கடிதத்தில் ஒரு முக்கியமான செய்தியைக் கூறியுள்ளார். சேதுபதி அரசரும், விவேகானந்தரும் ஒருங்கு வீற்றிருக்கும் அரிய தோற்றத்தை நேரில் கண்டு மகிழ்ந்து சுந்தரப் புலவர் என்பவர் பாடல்கள் பல பாடினார். சேதுபதி அரசர் அவருக்குக் கச்சத்தீவில் ஒருபகுதியை மானியமாகக் கொடுத்தார் என்று அவர் எழுதியுள்ளார். விவேகானந்தர் இராமநாதபுரம் சேதுபதிகளுடன் இருந்த நாள் 27.1.1897 ஆகும்.

மேற்கண்ட செய்திகள் மூலமாக ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளாகச் கச்சத்தீவு இராமநாதபுரம் சேதுபதி அரசரின் பரம்பரை உரிமைச் சொத்தாக இருந்தது என்பது மிகவும் தெளிவாகப் புலப்படுகிறது. 1948 இல் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டபோது கச்சத்தீவைச் சேதுபதிகள் அரசிடம் ஒப்படைத்தனர். ஆனால், பன்னெடுங்காலம் காத்து வைத்திருந்த புனிதத் தீவை இந்திய அரசு நெடுநாள் வைத்துக் காப்பாற்ற இயலவில்லை.

### அந்தோணியார் திருக்கோயில்

கச்சத்தீவில் தமிழகக் கடற்கரை ரோமன் கத்தோலிக்க மீனவர்கள் காவல் தெய்வமாகக் கருதும் புனித அந்தோணியார் திருக்கோயில் உள்ளது. அங்கு மற்றொரு கடல் காவல் தெய்வமான செபஸ்தியானுக்கும் உருவச்சிலை ஒன்று புனித அந்தோணியார் உருவச்சிலையுடன் வைத்துள்ளனர். ஆனால், பொதுவாகக் கோயிலை அந்தோணியார் கோயில் என்றே மக்கள் அழைக்கின்றனர்.

அக்கோயிலின் வெளியே சுமார் மூன்று மீட்டர் உயரம் உள்ள புனிதச் சிலுவை ஒன்றுள்ளது. அங்குக் கடல் பயணக் காவல் அன்னையின் உருவம் (Our Lady of Good Voyage) அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 90 ஆண்டுகட்கு முன்பு இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டம் தொண்டி அருகே உள்ள நம்புதாழையைச் சேர்ந்த மீனவர் சீனிக்குப்பன் என்பவர் இக்கோயிலைக் கட்டியதாகக் கூறுகிறார்கள். மீன் பிடிக்கச் சென்ற சீனிக்குப்பனுக்கு ஏற்பட்ட பேரிடர் நீங்கியதன் நினைவாக அந்தோணியாருக்கு அவர் இக்கோயிலைக் கட்டினாராம்.

முதலில் இக்கோயில் சாதாரண கீற்றுக் கொட்டகையில் இருந்தது. பின்னர்க் கேரள மாநிலக் கள்ளிக்கோட்டை, மங்களூரில் செய்யப்பட்ட ஓடுகள் வாங்கப்பட்டு 2.1.1951 இல் தான் ஓட்டுக் கட்டிடமாக மாற்றப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சுத் திங்கள் முதல் வாரத்தில் இக்கோயிலில் அந்தோணியார் திருவிழா நடைபெறும். மூன்று நாட்கள் நடைபெறும் அவ்விழாவில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கலந்து கொள்வர். எண்ணற்ற மெழுகுவர்த்திகள் ஏற்றி விழாக் கொண்டாடப்பெறும். இந்தச் சந்தர்ப்பத்தையே சாஸ்திரி சிறீமாவோ ஒப்பந்தப்படி இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட தமிழர்கள் தங்கள் இலங்கை உறவினர்களைச் சந்திக்கப் பயன்படுத்திக் கொண்டனர். பாஸ்போர்ட், விசா இல்லாமல் இரு நாட்டு மக்கள் சந்திக்கும் எளிமையான சந்திப்பாக இவ்விழாநாள் விளங்கிற்று.

அந்தோணியார் திருவிழாவை முன்னின்று நடத்தியவர்கள் இராமநாதபுரம் வட்டம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்கப் பங்குக் குருவினரே ஆவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோணியார் பக்தர்கள் தங்கள் கோயிலுக்குச் சென்று வழிபட இன்று அனுமதியில்லை. இப்பொழுது, கச்சத்தீவு அந்தோணியார் கோயிலை இலங்கைப் போலீசார் தம் காவல் நிலையமாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

**கச்சத்தீவில் கண்டவை**

1974 மார்ச்சுத் திங்கள் பத்தாம் தேதி கச்சத்தீவில் நடைபெறும் அந்தோணியார் விழாவைப் பயன்படுத்திக் கொண்டு கச்சத்தீவைப் பார்வையிட இக்கட்டுரையாளர் நேரில் சென்றார்.

இராமேசுவரத்தில் சில தனிப்பட்டவர்களின் **'டீசல் லாஞ்ச்' 'ஸ்டீம் லாஞ்ச்'** என்று கூறப்படும் விசைப்படகுகள் சில கச்சத்தீவு செல்லத் தயாராக இருந்தன. அவை அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றிக் கொண்டன. ஏற்றிக்கொண்ட பின்னர் முதலில் கேட்டதற்குமேல் மூன்று மடங்கு, நான்கு மடங்கு தொகையைக் கட்டணமாக நடுக்கடலில் வசூலித்துக் கொண்டனர். அன்று இந்தியப் பகுதியாக அத்தீவு இருந்தும் இராமேசுவரத்தில் கச்சத்தீவு செல்லும் பயணிகள் நன்மைக்காகத் தமிழக அரசோ, இந்திய அரசோ எந்தவிதமான சிறு ஏற்பாட்டையும்கூடச் செய்யவில்லை.

கச்சத்தீவைச் சுற்றிலும் கடற்கரையில் கரும்பாறைகள் உள்ளன. கடல் நீரும் கரையருகில் ஆழமாக இல்லை. விசைப்படகு அங்கு செல்ல முடியாது. சுமார் 100-150 மீட்டர் தூரத்திலேயே விசைப்படகிலிருந்து இறங்கி 'வத்தை' எனப்படும் கட்டுமரத்தில் ஏறிக்கொண்டு சென்றுதான் கச்சத்தீவை அடைய முடியும். வத்தைக்கு தனியாகக் கட்டணம் செலுத்த வேண்டும்.

கச்சத்தீவில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. சுமார் 3000 பேருக்கு மேல் இருக்கலாம். அங்குள்ள மக்கள் மூன்று வகையாகக் காணப்பட்டனர்.

1. புனித அந்தோணியாரை வணங்க வந்த பக்தர்கள்.

2. தம் உறவினர்களைப் பார்க்க வந்தவர்கள்.

3. இலங்கையிலும் இந்தியாவிலும் அரிதாகக் கிடைக்கும் பொருட்களை அதிகமான விலைக்கும், பண்டமாற்றாகவும் விற்றுப் பொருள்தேட வந்தவர்கள்.

இம்மூன்று வகையிலும் இந்தியர்கள் இலங்கை மக்கள் இருவரும் அடங்குவர். இலங்கை மக்கள் பெரும்பாலும் தமிழர்களாகவும், சிறுபான்மை சிங்களவர்களாகவும் இருந்தனர். இலங்கைப் பொதுமக்கள் மட்டுமின்றி அரசு அதிகாரிகள் சிலரும் காணப்பட்டனர். மூன்று டின் தேங்காயெண்ணெய் கொடுத்துத் தமிழக வியாபாரியிடம் ஒரு 'சங்குமார்க்' லுங்கி வாங்கினார் ஓர் இலங்கைக்காரர்.

கச்சத்தீவின் கிழக்குப் பக்கம் **'கஜபாகு'** என்ற பெரிய இலங்கைப் போர்க்கப்பல் நின்று கொண்டிருந்தது. இலங்கை காவலர்களும், படை வீரர்களும் கச்சத்தீவின் பல இடங்களில் காணப்பட்டனர். இலங்கை விமானம் ஒன்று அடிக்கடி மிகத் தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தது. மாவட்ட ஆட்சியர் நிலையில் உள்ள இலங்கையைச் சேர்ந்த ஓர் உயர் அதிகாரியும் வேறு சில அதிகாரிகளும் அங்கு முகாமிட்டிருந்தனர். இலங்கைச் சுங்க அதிகாரிகளும் சிலர் இருந்தனர். (இலங்கை அதிகாரிகள் பலரே இந்திய வணிகர்களிடம் பண்டமாற்றுச் செய்தனர் என்பது சுவையான செய்தி)

இலங்கை அரசு மேற்கண்டபடி படையெடுப்பு அல்லது முற்றுகை போல எல்லா ஏற்பாடுகளையும் விரிவாகச் செய்திருக்க இந்திய அரசு சார்பில் ஒரு காவலரையேனும் கச்சத்தீவில் காணவில்லை.

1972, 73 ஆம் ஆண்டுகளில் கச்சத்தீவில் நடைபெற்ற அந்தோணியார் விழாவிலும் இதேபோல இலங்கை அரசின் முற்றுகைக் காட்சி காணப்பட்டதாக அங்கு வந்தவர்கள் பலர் கூறினர். பத்திரிகைகளும் எழுதியுள்ளன. கச்சத்தீவு இந்தியாவுக்கு உரியதாக இருந்த காலத்திலும் இந்நிலை என்றால் அத்தீவைப் பற்றிய உண்மையான அக்கறை இந்திய அரசுக்குக் கொஞ்சமும் இருக்கவில்லை என்பது தெளிவாகிற்று.

அந்தோணியார் விழாவிற்கு எந்த ஏற்பாடும் செய்யாத இந்திய அரசு அதிகாரிகளில் சுங்க இலாகாவினர் மட்டும் விழிப்போடு இருந்தனர். சில அப்பாவி வியாபாரிகளிடம் கச்சத்தீவு செல்லும்போது இராமேசுவரத்தில் வரி வசூலித்தனர். கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுக்கு முன்னரே இவ்வாறு நடந்தது. கச்சத்தீவு அப்போது இந்தியப் பகுதிதான். அங்கு வணிகர்கள் சென்றுவர ஏன் வரி வசூலிக்க வேண்டும்?

## இந்திய அளவைத்துறையினர்

1874 ஆம் ஆண்டு கர்னல் வாக்கர் அவர்களும், அவருடைய உதவியாளர் மேஜர் பிரான்ஃபீல்டு அவர்களும் இந்தியாவின் அளவைத்துறைக்காகக் கச்சத்தீவை அளந்தனர். இதுபற்றி அவர்கள் நாட்குறிப்பில் விளக்கமாகக் குறித்துள்ளனர்.

அந்தோணியார் கோயிலுக்கு முன்புறம் இந்திய அரசின் அளவைத் துறையினர் நட்ட தூண் இன்றும் உள்ளது. அதில் அளவை எண் 1250 என்று குறிக்கப்பட்டுள்ளது.

1895, 1930 ஆம் ஆண்டுகளில் மீண்டும் கச்சத்தீவு அளவை செய்யப்பட்டு இந்திய அரசு வரைபட ஆவணங்களில் குறிக்கப்பட்டது. இவ் வரைபடங்களின் அடிப்படையில் 1952, 1956ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பெற்ற வரைபடங்கள் அனைத்திலும் இராமேசுவரத்தின் ஒருபகுதியே கச்சத்தீவு என்பது மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

1874 முதல் 1956ஆம் ஆண்டுவரை இந்தியாவின் பகுதிதான் என்பதைத் திட்டமிட்டுக் காட்டிய இந்திய அரசின் அளவைத் துறையினர் அரசு கேட்டபோது இப்பழைய ஆவணச் சான்றுகளைச் சரியாக எடுத்துக்காட்டத் தவறிவிட்டனர்.

## தமிழக அரசு வெளியீட்டில்

1972 ஆம் ஆண்டு சூலை மாதம் 15ஆம் தேதி தமிழக அரசு ஆவணக்காப்பகம் மூலம் இராமநாதபுரம் மாவட்டக் கெசட்டியரின் திருத்திய புதுப்பதிப்பு வெளியிடப்பட்டது. 1062 பக்கங்கள் அடங்கிய அந்நூலின் தொடக்கத்தில் இராமநாதபுரம் மாவட்ட வரைபடம் அச்சிடப்பட்டுள்ளது. அவ்வரைபடத்தில் 'கச்சத்தீவு' காட்டப்படவே இல்லை. அன்றைய தேதியில் கச்சத்தீவு அதிகாரபூர்வமாக இந்தியப் பகுதிதான். இந்தியப் பகுதியான கச்சத்தீவை விட்டுவிட்டு எப்படி வரைபடம் தயாரித்தார்களோ தெரியவில்லை. உள்ளே விளக்கத்தில் கச்சத்தீவு இராமநாதபுரத்திற்கு உரித்தென்று எழுதியுள்ளனர்.

### இந்திய வழக்கு மன்றமும் கச்சத்தீவும்

கீழக்கரை வாசுதேவன் செட்டியார் என்பவர் கச்சத்தீவுக்குச் சில பொருட்களைக் கொண்டு சென்றார். இந்திய அரசின் சுங்க இலாகாவினர் அவரைத் தடுத்தனர். வழக்கு உச்சநீதி மன்றம் வரை போயிற்று. கச்சத்தீவு இந்தியாவின் ஒருபகுதியே; அங்குச் சென்று வாணிகம் செய்ய ஒவ்வொரு இந்தியருக்கும் உரிமை உண்டு. இந்தியர் யார் வேண்டுமானாலும் அங்குப் போகலாம் என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது.

ஒருமுறை கச்சத்தீவுப் பகுதியில் ஒருவர் முத்துக்குளித்து எடுத்து வைத்திருந்த சங்குகளை வேறொருவர் திருடிவிட்டார். சென்னை உயர்நீதிமன்றம் அவ்வழக்கை ஏற்று விசாரித்துத் தீர்ப்பளித்தது. இதனால் கச்சத்தீவுப் பகுதியில் சென்னை உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது தெரிகிறது.

இந்திய அரசின் முன்னாள் வழக்கறிஞர் (அட்டர்னி ஜெனரல்) நிரேன்டே அவர்கள் 'அன்றும் சரி; இன்றும் சரி; கச்சத்தீவு இந்தியாவின் ஒருபகுதியே' என்று கூறினார்.

மற்றொரு தீர்ப்பில் இராமநாதபுரம் துணை ஆட்சியர் வழக்கின் தீர்ப்பு ஒன்றில் இலங்கையின் தலைமன்னாருக்கு 5 கி.மீ. மேற்கு வரை தன் அதிகாரத்தைச் செலுத்தியுள்ளார்.

### குள்ளக்காரன் பெட்டி - தமிழகத் திட்டு

தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் உள்ள கடல் பகுதியில் ஆழம் மிகக் குறைவு. இரண்டின் இடையில் சுமார் 24 திட்டுக்கள் உள்ளன. அவற்றைப் பெட்டி அல்லது திட்டு என்று கூறுவர். தலைமன்னாருக்கு மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள குள்ளக்காரன் பெட்டிவரை தமிழ்நாட்டைச் சேர்ந்திருந்தது. இதை ஆதாம் பாலம் என்று கூறுவர். இராமன் கட்டிய சேது அணை இதுதான் என்பர்.

தலைமன்னாரிலிருந்து மேற்கே உள்ள பெட்டிகளில் இலங்கை தன் மேற்கு எல்லையாகக் கூறும் 79° 41' 4'' கிழக்குத் தீர்க்க ரேகை ஏறக்குறைய 8 ஆம் பெட்டிவரை அமைந்துள்ளது. அப்பெட்டியிலிருந்து நேர் வடக்காகப் பார்த்தால் அவ்வெல்லை கச்சத்தீவுக்குக் கிழக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே, இலங்கை தன் மேற்கு எல்லையாகக் கூறும் பகுதிக்குள் கச்சத்தீவு அடங்கவில்லை.

ஒருமுறை இலங்கைப் படகோட்டிகள் பாம்பன் வந்த சில அரபுப் பயணிகளைக் குள்ளக்காரன் பெட்டியில் இறக்கி விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். அவர்களுள் சிலர் இறந்தனர். சிலரை மீனவர்கள் மீட்டனர்.

இலங்கை மீனவர்கள் மீது இராமநாதபுரம் துணை ஆட்சியர் முன்பு கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. இலங்கை மீனவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. இதிலிருந்து இந்திய வழக்கு மன்றத்தின் அதிகாரம் மன்னாருக்கு மேற்கே 5கி.மீ. வரை செல்லுபடியானது என்பதை அறிகிறோம்.

இந்தியாவுக்கு உரித்தான குள்ளக்காரன் பெட்டியிலிருந்து நேர் வடக்கே கோடு கிழித்தால் கச்சத்தீவுக்குக் கிழக்கே அக்கோடு வருகிறது. தலைமன்னார் - தனுஷ்கோடிப் பகுதியில் மேடான இப்பகுதியில் முன்பு நடந்தே இலங்கை செல்லும் வகையில் இருந்தது. 'கடல் அடையாது இலங்கை கொண்ட' தாகத் தமிழக மன்னர்கள் தங்களை அழைத்துக் கொண்டனர். புதுக்கோட்டை மாவட்டக் கோனாட்டுப் பகுதி 'கடல் அடையாது இலங்கை கொண்ட சோழ வளநாடு' என்று அழைக்கப்பட்டது.

## இலங்கைக்கு உரியது அல்ல

கச்சத்தீவு இந்தியாவுக்கு - தமிழகத்திற்கு - இராமநாதபுரம் சேதுபதி அரசர்கட்கு உரியது. கச்சத்தீவு தமிழரின் பரம்பரைச் சொத்து என்று எண்ணற்ற ஆவணக் குறிப்புக்கள் உள்ளன என்பதைக் கண்டோம். அதேபோல், இலங்கையிலிருந்து கிடைக்கும் பல ஆவணக் குறிப்புக்கள் இலங்கைக்குக் கச்சத்தீவு உரியது அல்ல என்றே குறிக்கின்றன.

நெதர்லாந்துக்காரர்கட்கும் கண்டி அரசர்கட்கும் 14-2-1766 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கச்சத்தீவு இலங்கையின் பகுதியாகக் காட்டப்படவில்லை.

17-3-1766 அன்று ஜான் ஸ்ரூடர் என்பவர் டச்சு வரைபடங்களைப் பார்த்து எழுதிய நினைவுக் குறிப்பில் கச்சத்தீவு இலங்கையின் பகுதியாகக் காட்டப்படவில்லை.

டச்சுக்காரர்களின் உரிமையாக இருந்த இலங்கைக் கடற்கரைப் பகுதிகள், தீவுகள் இங்கிலாந்து அரசுக்கு மாற்றும் ஒப்பந்தங்கள் எதிலும் கச்சத்தீவைப் பற்றிய குறிப்பே இல்லை.

இலங்கையைச் சில நூற்றாண்டுகள் 1685 முதல் ஆட்சிபுரிந்த போர்ச்சுக்கீசியர் குறிப்புக்களிலும் இலங்கைக்குரியதாகக் கச்சத்தீவு குறிக்கப் பெறவில்லை. நெடுந்தீவாகிய டெல்த் தீவே எல்லையாக இருந்துள்ளது.

19 ஆம் நூற்றாண்டில் பர்னோஃப் என்னும் வரலாற்று ஆய்வாளர் இலங்கைக்கு வந்தார். கடற்கரை எல்லைகளை நன்கு ஆராய்ந்தும் சமஸ்கிருத, பாலி, சிங்கள ஆவணங்களை ஆராய்ந்தும், மகாவம்சம், இராஜாவளி, இராஜரத்னாசரி போன்ற நூல்களை ஆய்வு செய்தும் இலங்கை தேசப்படம் வரைந்தார். அவர் உதவியாளர் எம். ஜுல்ஸ் மோல் 1857இல் Lanka or Tambraparani according to the Sanscrit, Pali and Singhalece Authorities என்னும் அத்தேசப்படத்தை வெளியிட்டார். அதில் கச்சத்தீவை விட சின்னஞ்சிறு தீவுகள் இலங்கைக்கு உரித்தாகக் குறிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு உரியதாகக் கச்சத்தீவு அவ்விரிவான படத்தில் குறிக்கப்படலில்லை.

அரேபிய, ஐரோப்பியப் பயணிகள் இலங்கையின் பலபகுதிகளைச் சுற்றிக் குறிப்பு வரைந்துள்ளனர். சின்னஞ்சிறு பாறைப் பகுதியைக் குறிப்பிட்ட அவர்கள் எங்கும் கச்சத்தீவை இலங்கையின் பகுதி என்று குறிக்கவில்லை. டெல்த் என்னும் நெடுந்தீவையே அவர்கள் இலங்கை எல்லையாகக் குறித்துள்ளனர்.

1-1-1803இல் வெளியிட்ட ஆரோ ஸ்மித்தின் அதிகாரபூர்வமான இலங்கைப் படத்திலோ, 1954, 1956ஆம் ஆண்டு சர்வேயர் ஜெனரல் வெளியிட்ட இலங்கைப் படங்களிலோ எதிலும் கச்சத்தீவு இலங்கைக்குரியதாகக் கூறப்பெறவில்லை.

ஆர்.எல்.புரோகிர் என்பார் இலங்கைத் தேசப்படங்களை ஆய்வு செய்து Maps and Surveys of Ceylon என்னும் நூலை 1802இல் இங்கிலாந்தில் வெளியிட்டார். அதில் யாழ்ப்பாணப் பகுதிகளும், தீவுகளும் குறிக்கப்பட்டுள்ளன. கச்சத்தீவு யாழ்ப் பகுதியாகக் குறிக்கப் பெறவில்லை.

டர்னொர் என்பவர் மேற்கண்ட நிலப்படங்களை ஆய்வு செய்து உறுதிப்படுத்தினார். அவர் கச்சத்தீவு இலங்கைக்குரியதாகக் குறிக்கவில்லை.

1859ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் எமர்சன் டென்னெண்ட் என்பவர் இலங்கையின் வரைபடத்தை விரிவாக வெளியிட்டுள்ளார். (An Account of the Island, Physical, Historical and Topographical with notice of its Natural History Antiquities and Productions' Vol I, II) இலங்கை வடக்கு அட்ச ரேகை 5° 55' -9° 51' ஆகியவற்றின் இடையிலும் கிழக்குத் தீர்க்கரேகை 79° 41' 4'' - 81° 54' 50'' ஆகியவற்றின் இடையிலும் உள்ளது என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். கச்சத்தீவு கிழக்குத் தீர்க்கரேகை 79° 35' க்குள்ளேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இலங்கை எல்லைக்குள் கச்சத்தீவு வருவதில்லை.

அவர் குறிப்பிடும் எல்லையினுள் கச்சத்தீவு அடங்காமல் அதற்கு வெளியே இந்தியாவின் பகுதியாகவே குறிக்கப்பெறுகிறது. அந்நூலிலேயே பிளைனி, தாலமி ஆகியோர் வரைந்து காட்டியுள்ள தொன்மையான இலங்கைப் படங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் நெடுந்தீவு இலங்கையின் பகுதியாகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. வேறுசில தீவுகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கச்சத்தீவு இலங்கையின் பகுதியாகக் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட செய்திகள் 1-3-1970 டெக்கான் ஹெரால்டு வாரமலரில் விளக்கமான கட்டுரையாக வெளியிடப்பட்டுள்ளது.

வாலன்ஷியா என்னும் பயணி ஒரு குறிப்பைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார். ஒப்பந்த அடிப்படையிலும், போர் ஆதிக்க அடிப்படையிலும் சில சமயம் தற்காலிகமாகப் பாம்பன் பகுதிகள் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிகளின் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டபோதும், ஆதிக்கத்துக்கு உட்பட்டபோதும் இராமநாதபுர சமஸ்தான ஆட்கள் கச்சத்தீவுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும், அவர்கட்கு டச்சுக்காரர்கள் வரி விதிக்கவில்லை என்பதையும் தங்கள் மக்களின் உரிமைகளைச் சேதுபதி அரசர்கள் மிகவும் பாதுகாப்பாகக் கவனித்து வந்தனர் என்றும் கூறுகிறார்.

21-10-1921 இல் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஒன்றில் கச்சத்தீவு இந்தியாவின் ஒருபகுதியே என்பது திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்டது.

8-5-1966 அன்று இலங்கையின் அமைச்சரவைச் செயலாளர் பி.பி.பியரீஸ் என்பவர் இலங்கைப் பராளுமன்றத்தில் பேசும்போது கச்சத்தீவு என்றும் வட இலங்கையின் ஒருபகுதியாக இருந்தது இல்லை. இது இராமநாதபுரம் அரசர் சேதுபதிக்கு உரிமையான சொத்து. 25 ஆண்டுகட்கு முன்னரே விக்டோரியா மகாராணியின் ஆவணங்கள் மூலம் நான் நன்கு அறிந்துள்ளேன் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

5-4-1972 இலங்கை வீரகேசரியில் கச்சத்தீவு பற்றிய கட்டுரை ஒன்று வெளிவந்தது. அக்கட்டுரையாசிரியர் 'கச்சத்தீவில் பசுமையான புல்வெளியைக் கண்டேன். இலங்கையில் காணக்கூடிய புல்வகைகட்கும் இவற்றிற்குமிடையே பலத்த வித்தியாசம் இருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது' என்று எழுதியுள்ளார்.

**பிரச்சினை உருவானது**

இரண்டாம் உலகப் பெரும்போரின்போது இங்கிலாந்துக் கப்பல்படை கச்சத்தீவில் தங்கி வெடிகுண்டுகள் வெடிக்கும் சோதனையைச் செய்தது.

இலங்கை விடுதலை அடையும்வரையில் கச்சத்தீவுப் பிரச்சினை பெரிதாக எழவில்லை. பாக் நீரிணைப்பில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் உள்ள தூரம் சுமார் 30 கிலோ மீட்டர்தான். பன்னாட்டு மரபுப்படி ஒருநாட்டின் எல்லையிலிருந்து 20 கி.மீ. வரை ஒரு நாட்டுக்குச் சொந்தமானது.

இலங்கை, இந்தியா இருநாடுகளுக்கும் இடையில் நடுக்கடலில் எல்லைக்கோடு உள்ளது என்று வைத்துக் கொண்டால் கச்சத்தீவு தனக்கே சொந்தம் என்று ஒரு புதிய பிரச்சினையை இரு நாடுகளும் விடுதலையடைந்த பிறகு இலங்கை எழுப்பியது.

ஆனால், யாழ்ப்பாணத் தமிழர்களும், இலங்கை வரலாற்று ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும், இதழ்களும் ஒருபோதும் கச்சத்தீவு இலங்கைக்குரியது என்று எழுதவில்லை. மாறாகக் கச்சத்தீவு இந்தியாவுக்கே உரியது என்று கூறியுள்ளனர்.

பல சான்றுகள் தனக்கு ஆதரவாக இருந்தும் இந்திய அரசு மீனவர்கள் மீன்பிடிக்க மிக முக்கியமாகப் பயன்படுத்தும் கச்சத்தீவில்

*தன் உரிமையை என்றுமே உறுதியாக ஆதாரங்களுடன் நிலைநாட்டியதில்லை. மார்ச்சு மாதம் நடைபெறும் அந்தோணியார் விழாவுக்குச் செல்லும் மக்களுக்கு எந்தவிதமான வசதிகளையும் செய்ததில்லை. தன் அதிகாரிகளையும், போலீஸ், இராணுவம் ஆகியவைகளையும் அனுப்பியதில்லை. 1974 இல் இக்கட்டுரையாளர் நேரிலேயே அதைக் கண்டார்.*

*லால்பகதூர் சாஸ்திரி பிரதமராக இருந்தபோது கச்சத்தீவு கடல் எல்லைப் பிரச்சினை தொடர்பான விவாதத்திற்கு இந்தியக் குழு ஒன்று கொழும்பு சென்றது. அக்குழுவில் அன்றைய தமிழக அமைச்சர் இராமையா என்பவரும் இருந்தார். அவர் ஒருமுறை கூட குழுவில் பேசவில்லை என்று முன்னாள் ஆளுநர் க.சந்தானம் குறிப்பிட்டுள்ளார் (25.9.94 தினமணி கதிர்).*

*இராமநாதபுரம் மாவட்டம் என்னும் நூலை எழுதிய* ***'சோமலெ'*** *தம் நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.*

*'ஒவ்வொரு திருவிழாவின்போதும் இலங்கை ராணுவம், கடற்படை ரோந்துக் குழுவினர் கப்பல், மோட்டார் படகுகளில் வருகிறார்கள். ஆனால், இந்திய ராணுவம், போலீஸ் யாரும் போவது இல்லை. பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதுமில்லை. இதனால் கச்சத்தீவு கேட்பாரற்ற - நாதியற்ற தீவு என்று இலங்கை அரசு கருதியது'*

*மேற்கண்ட நிலையைத் தனக்குச் சாதகமாக இலங்கை அரசு எடுத்துக் கொண்டது. மெல்ல மெல்லத் தன் நிலையை உறுதி செய்து கொண்டு இறுதியில் நம் உரிமையையும் அபகரித்துக் கொண்டது.*

***இந்தியப் பாராளுமன்றத்தில்***

*1955 இல் இலங்கைக் கடற்படை வீரர்கள் தமிழகத்தின் கச்சத் தீவைத் தம் பயிற்சிக்காகப் பயன்படுத்தினர். இந்தியா வெறும் வாயால் கண்டித்ததோடு நின்றுவிட்டது. அதனால், 1956 மார்ச்சு மாதம் மீண்டும் கடற்படைப் பயிற்சிக்கு இலங்கை முயற்சித்தது. அந்நிகழ்ச்சி பாராளுமன்றத்தில் கடுமையாக எதிரொலித்தது. இந்தியப் பாராளுமன்றத்தில் 'இலங்கை அரசு இந்தியாவின் எல்லைக்குள் தமிழகத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாக விளங்கும் போர் முக்கியத்துவம் வாய்ந்த கச்சத்தீவை அபகரிக்க முயற்சிக்கிறது' என்று உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.*

அப்போதிருந்துதான் கச்சத்தீவு இந்திய அளவில் அறிமுகம் ஆனது. கடற்படைப் பயிற்சி முயற்சிகளை ஒத்திப் போடுக என இந்திய அரசு இலங்கை அரசுக்குத் தெரிவித்தது, பயிற்சியை நிறுத்திய இலங்கை அரசு கச்சத்தீவு தன்னுடையது என்று அறிவித்தது.

பிரதமர் நேரு அவர்கள் 'கச்சத்தீவு பற்றிப் போதுமான செய்திகள் இல்லை' என்று கூறினார் ! தூதர்கள் கூடிப்பேசி முடிவெடுக்கும் வரை பிரச்சனை அப்போது ஒத்திப் போடப்பட்டது. ஆனால், அந்த இடைக்காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை அரசு கச்சத்தீவு தன்னுடையது என்று பலமுறை கூறியது. ஆனால், அது ஆதாரங்கள் எதையும் அள்ளி வைக்கவில்லை.

இந்தியா என்றொரு முழுமையான நாடு முன்பு இருந்ததில்லை. 1947இல் விடுதலை பெற்றுத் தனிநாடாக ஆன பின்னரும் 1968 வரை தன் எல்லைகள் எதுவென இந்தியா வரையறை செய்யாதது வெட்கக்கேடான செயல் அல்லவா?

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 1.3.68 அன்று 'தமிழ்நாட்டு அரசிடம் இராமநாதபுர அரசைப் பற்றிய விபரங்கள் கேட்டுள்ளோம்' என்று கூறினார். பின்னர், 'இந்த விவகாரம் பற்றிய போதிய செய்திகள் இந்திய அரசிடம் இல்லை' என்று ஒரு கட்டத்திலும், 'கச்சத்தீவு பற்றிய குறிப்பேடுகளை ஆராய்ந்து கொண்டுள்ளோம்' என்று ஒரு கட்டத்திலும் கூறினார்.

'இந்தச் சிறு தீவு பற்றி இருநாடுகளும் போராடும் என்ற நிலை இல்லை; இந்தியாவின் தன்மானம் இந்தப் பிரச்சனையால் இழக்கப் படவில்லை' என்றெல்லாம் இந்தியப் பாராளுமன்றத்தில் ஏனோதானோவென்று கூறப்பட்டது. எப்பொழுதும் இந்திய அரசு கச்சத்தீவு தொடர்பாக உறுதியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்திய வெளிநாட்டு ராஜாங்க அமைச்சர் பி.ஆர். பகத் அவர்கள் 1.3.1968 அன்று 'கச்சத்தீவு இந்தியா-இலங்கை இரு நாடுகட்கும் உரியதல்ல'என்று கூறியபோது பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் முழு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் 'வெட்கம் - வெட்கம்' என்று கூச்சலிட்டனர். அமைச்சர் பி.ஆர். பகத் அவர்கள் 'கச்சத்தீவு பாறைத்தீவு-பொட்டல்காடு' என்றார். அச்செய்தி பொய்யானது மிகத் தவறானது என்பதைக் கச்சத்தீவை ஒருமுறை பார்த்தவர் உணர்வர்.

### தமிழக மண்ணைத் தானம் செய்தனர்

அண்டை நாட்டுடன் வீண் சச்சரவு செய்து கொண்டிருப்பதை விரும்பாமல் நம் பக்கத்து நாட்டுடன் நட்பாக - சமாதானமாக இருக்க வேண்டும் என்பது கருதியும், இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் நல்லுறவு ஏற்பட வேண்டும் என்பது கருதியும் இலங்கைக்குக் கச்சத்தீவைக் கொடுப்பதாக இந்தியா 1974 ஜூன் இறுதியில் அறிவித்தது. ஆதாரங்களின் அடிப்படையில் கொடுப்பதாக அறிவிக்கவில்லை.

பாகிஸ்தான், சீனா, பர்மா, வங்காள தேசம் ஆகியவற்றோடு நட்பைப் பெருக்கிக் கொள்ள இந்தியாவிலுள்ள அண்டை மாநிலப் பகுதியை அன்பளிப்பாகத் தர மைய அரசு ஒப்புக் கொள்ளுமா? அதை அம் மாநில மக்கள்தாம் விரும்புவார்களா? விடுவார்களா? தமிழக மக்கள், அரசியல் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்ட போது உருப்படியாக ஒன்றுபட்டு என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்குச் சொந்தமான வீட்டையோ, நிலத்தையோ அன்னியர் அபகரித்தால் வாளா இருப்பார்களா? நாடு அவர்கள் சொந்தச் சொத்தைவிட மேலானது அல்லவா?

அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கச்சத்தீவு இலங்கைக்கு அளிக்கப்பட்டதை மிகக் கடுமையாக எதிர்த்தார். அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினார். தமிழகச் சட்டசபையிலும் கச்சத்தீவு இலங்கைக்கு அளிக்கப்பட்டதைக் கண்டித்து ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் இந்திய அரசு நடந்து கொண்டது. தமிழக ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் தமிழகமெங்கணும் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இது இரண்டு நாடுகட்கு உட்பட்ட பிரச்சினை ஆனதால் தமிழக அரசால் வேறு நடவடிக்கை எடுக்க முடியாமற் போனது.

### கச்சத்தீவும், தமிழக மீனவர்களும்.

கச்சத்தீவுப் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற இராமநாதபுரம், முதுகுளத்தூர், திருவாடானை வட்ட மீனவர்களுக்குக் கச்சத்தீவு மிகவும் தொழில் ரீதியாகப் பெரிதும் பயன்பட்டது.

அப்பகுதியில் அதிக அளவில் விலை உயர்ந்த சிறுமீன்வகைகள் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

கச்சத்தீவில் முன்பு கலங்கரை விளக்கு இருந்தது என்பதற்கு அடையாளமாக அதன் அடிப்பகுதி காணப்படுகிறது. அக்கலங்கரை விளக்கம் இந்திய மீனவர்களுக்கே வழிகாட்டப் பயன்பட்டது என இலங்கை எழுத்தாளர் நேரில் பார்த்து எழுதியுள்ளார். கடலில் அவர்கள் மீன் பிடிக்கும் போது எங்கு உள்ளோம் என்பதையும், மீன் பெரும்அளவில் கிடைக்கும் இடத்தையும் தெரிந்து கொள்ளக் கச்சத்தீவின் இருப்பிடம் பயன்பட்டது.

தமிழக மீனவர்களின் படகோ அல்லது வலையோ சேதம் அடைந்தால் அவைகளைப் பழுது பார்க்கக் கச்சத்தீவு மிகவும் பயன்பட்டது. மீனவர்கள் கச்சத்தீவில் பலநாட்கள் தங்கிச் சமையல் செய்து சாப்பிட்டுள்ளனர். அவர்கள் பிடித்த மீன்களைக் காயவைத்துக் கருவாடாக மாற்றக் கச்சத்தீவு மிகவும் பயன்பட்டது. வலைகளை உலர்த்தவும், காய வைக்கவும் கச்சத்தீவு பெரிதும் பயன்பட்டது.

இந்தியக் கப்பல் அங்கு செல்லும் உரிமையும், மேற்கண்ட பல்வேறு உரிமைகளும், அந்தோணியார் ஆலய வழிபாட்டு உரிமையும் இந்திய மீனவர்கட்கும் யாத்திரிகர்கட்கும் அளிக்கப்படும் என்று கச்சத்தீவு தான ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது என இந்தியப் பாராளுமன்றத்திலும், தமிழ்நாட்டிலும் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டபோது இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது.

1976இல் இந்திய அரசு இலங்கையுடன் செய்து கொண்ட வேறொரு ஒப்பந்தம் மேற்கண்ட உரிமைகளையும் விட்டுக் கொடுத்தது என்பதையும் நாம் அறிவோம்.

கச்சத்தீவுப் பகுதியில் தமிழக மீனவர்கள் செல்ல இப்போது அனுமதிக்கப்படுவதில்லை. தப்பித் தவறிச் சென்றவர்களும், வழி தவறிச் சென்றவர்களும், இயற்கையின் சீற்றத்தால் வழி மாறியவர்களும் இலங்கைக் கடற்படை வீரர்களால் மிகவும் தொல்லைகட்கு உள்ளாகியுள்ளனர். தமிழக மீனவர் பலரைக் கொன்றிருக்கின்றனர். பலரை இலங்கைக்கு அந்நாட்டுக் கடற்படையினர் இழுத்துச் சென்று துன்புறுத்தியுள்ளனர். பலருடைய படகுகள்,வலைகள், பிடித்த மீன்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இந்நிலை இன்றும் தொடருகிறது. கச்சத்தீவு இலங்கைக்கு அளிக்கப்பட்டபின் இராமநாதபுரம் மாவட்டத்தின் இம்மூன்று

வட்டங்களில் மீன் பிடித்தல் மிகவும் குறைந்துவிட்டது. சிலர் மீன் பிடிப்பதையே விட்டுவிட்டனர். மைய அரசு இந்நிலையை நீக்க எம் முயற்சியும் எடுக்கவில்லை.

## சேது சமுத்திரத் திட்டம்

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையின் கடல் போக்குவரத்திற்கு இத்திட்டம் மிகவும் இன்றியமையாதது. இராமேசுவரம் தீவின் தெற்கிலும் வடக்கிலும் அமைந்துள்ள மன்னார் வளைகுடாவிலும், பாக் நீரிணைப்பிலும் கடல் ஆழம் குறைவு. அக்கடல் பகுதியில் ஆங்காங்கே பல திட்டுக்கள் உள்ளன. அதனால் பெரிய கப்பல்கள் செல்ல முடியாது.

அதனால் இந்தியாவின் மேற்கு எல்லையிலிருந்தும், மன்னார் வளைகுடாப்பகுதி எல்லையிலிருந்தும் பெருங் கப்பல்கள் கொழும்பு சென்று இலங்கையைச் சுற்றிக்கொண்டுதான் செல்லவேண்டும். அதனால் 600 லிட்டர் டீசல் செலவாகும். 20 மணி நேரம் மிகுதியாகும் பெரிய கப்பலுக்கு நாட்கூலி 30,000 ரூபாய் ஆகும். சேது சமுத்திரத் திட்டத்தால் இவை மிச்சமாகும்.

எடுத்துக்காட்டாகத் தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து ஒரு பெரிய கப்பல் சென்னை வர இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் வரமுடியும். அதனால் 750 கி.மீ. அதிகம் சுற்ற வேண்டியுள்ளது.

இக்குறையைப் போக்கக் கடலில் இரண்டு கிலோ மீட்டர் நீளம், 1400 அடி அகலமும், 40 அடி ஆழமும் உள்ள பெருங்கால்வாயை வெட்டிக் கடல் பாதையை ஏற்படுத்துவதே சேது சமுத்திரத் திட்டம். முதலில் இத்திட்டம் 5400 அடி நீளமும் 150 அடி அகலமும் 32 அடி ஆழமும் உடையதாகவே அமைக்கத் திட்டமிடப்பட்டது. பின்பு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் ஏற்றுக் கொள்ளப் பெற்றும் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. ஏறக்குறைய 300கோடிதான் இத்திட்டத்திற்குச் செலவாகும். ஆனால், நாம் அடையும் பலனோ மிக அதிகம். தமிழகமும், இந்தியாவின் கிழக்குக் கடற்கரை மாநிலங்களும் இதனால் பெரும் பயனடையும். வேலை வாய்ப்புக்கள் பெருகும். கச்சத்தீவும், அதன் பகுதிகளும் நமக்கு உரியதாக இருந்தால்தான் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறியபின் அமைதியாகப் பாதுகாப்புடன் கப்பல் போக்குவரத்து நடைபெறும். இத்திட்டம் நிறைவேற்றப்படுமானால்

பல்வேறு நாடுகளின் பெரிய கப்பல்கள் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். கச்சத்தீவுப் பகுதி நீர் ஆழம் குறைந்து மேடாவதால் ஒரு காலத்தில் கச்சத்தீவின் பரப்பு அதிகமாகலாம். அதன்மூலம் சேது சமுத்திரத் திட்டத்தின் கிழக்குப் பகுதி கச்சத்தீவின் உரிமையால் இலங்கைக்குச் சொந்தமாகும் நிலை ஏற்படலாம். அப்போது சேது சமுத்திரத் திட்டத்திற்கு இலங்கையும் உரிமைகோரும் அபாயம் ஏற்படும். கச்சத்தீவு நம் பகுதியாக இல்லாவிட்டால் இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் பாதுகாப்பற்ற பிரச்சனை உருவாகும்.

**கச்சத்தீவின் தேசிய முக்கியத்துவம்**

ஆழமான கடல் சூழ்ந்த இடத்தில், இந்தியப் பெருநாட்டின் தென்கிழக்குக் கோடியில், ஆள் அரவம் இல்லா இடத்தில், முக்கியத்துவம் வாய்ந்த சேதுக்கடலில் உள்ள கச்சத்தீவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மீனவர்கள் பயன்படுத்துவது மட்டும் அல்ல; கச்சத்தீவு நமக்கு உரியதாக இருந்தால் அங்கு கப்பற்படை அரண் அமைக்கலாம். நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சிக்களம் ஏற்படுத்தலாம். கப்பல் செப்பனிடும் நிலையம் தொடங்கலாம். போர் விமானம் தற்காலிக இறங்குமிடம் ஆகப் பயன்படுத்தலாம் (Air Strip). ரேடார் நிலையம் (Radar) அமைக்கலாம். இலங்கையின் வழியாக ஏதாவது வல்லரசு இந்தியாவைத் தாக்க முனைந்தால் ஏற்படும் போர் அச்சத்தைத் தவிர்க்க இத்தீவைப் பயன்படுத்தலாம். செய்தித் தொடர்பு நிலையும் அமைக்கலாம். எச்சரிப்பு மிதவை நிலையம் ஏற்படுத்தலாம் (Deep Water Mooring Buoys). கடல் உணவுவகை ஆராய்ச்சி நிலையம் தொடங்கலாம். ஏவுகணைத் தளம் அமைக்கலாம். அணுப்படைத்தளம் அமைக்கலாம். தென்- கிழக்காசியாவில் வல்லரசுகள் அமைக்கும் ஏவுகணைத் தளங்களுக்கு எதிர்த்தளம் அமைக்கலாம்.

மேற்கண்ட பல்வேறு நிறுவனங்களையும் இந்தியா அமைக்க அருமையான வாய்ப்பு அங்கு உண்டு. இராணுவம் போர்ப் பயிற்சி செய்யலாம். நாட்டுப் பாதுகாப்புக்கு இராணுவ வீரர்களை அங்கு நிறுத்தலாம். ஆம், இந்தியப் பெருநாட்டின் தெற்கு எல்லையைப் பாதுகாக்க கச்சத்தீவு அவசியம் தேவைப்படும். இன்று பல சூழல்கள் அப்பகுதியை அபாயகரமாகவல்லவா மாற்றியுள்ளது.

அண்மையில் இந்தியாவில் கப்பற்படை, விமானப்படை ஆகியவை இராமேசுவரம் பகுதியில் நாட்டுப் பாதுகாப்பின் பொருட்டு நிலைகொண்டுள்ளன. எனவே, இந்திய மண்ணில் அன்னியர் ஊடுருவாதவாறு தடுக்கக் கச்சத்தீவு இன்று மிகமிக இந்தியாவுக்குத் தேவைப்படுகிறது. எதிர்காலத்தில் இலங்கை தன் சூழ்நிலையால் சீனாவுக்கோ, அமெரிக்காவுக்கோ ஆதரவளிக்கும்போது அந்நாடுகளின் உளவு நிலையங்கள் கச்சத்தீவில் அமையும் அபாயம் உள்ளது.

இதுபோன்ற தீவுகளைப் 'போர் முகாமை வாய்ந்த தீவுகள்' என அழைப்பர். கச்சத்தீவைப் போன்ற, கச்சத்தீவைவிடச் சின்னஞ்சிறு தீவுகட்குப் பெரிய பேரரசுகள் ஆசைப்பட்டுத் தமதாக்கிக் கொள்ள முயன்றிருக்கின்றன. இதனை உலக வரலாற்றில் காணுகின்றோம்.

இந்துமாக்கடலில் இந்தியாவிற்கு 2500 கி.மீ. தொலைவில் உள்ள டிகோ-கார்ஷியாத் தீவைப் பெற அமெரிக்கா செய்யும் முயற்சியும், வல்லரசான சீனா, வியட்நாமின் பாரசல் தீவுக்கு உரிமை கொண்டாடும் முயற்சியும் உலகு நன்கு அறியும்.

தங்கள் நாட்டு எல்லைக்கு அப்பால் உள்ள சின்னஞ்சிறு குட்டித் தீவுகளைக் கூட பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா முதலிய வல்லரசு நாடுகள் கைப்பற்றச் செய்யும் முயற்சிகள் உலகில் தொடர்ந்து நடை பெறுகின்றன. சொந்தத் தீவைத் தானமாக வழங்கி ஏமாந்த நாடு இந்தியா ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

டிகோ-கார்ஷியாவில் அமெரிக்கத் தளம் அமைவதுகண்டு வலிமையான தன் எதிர்ப்பைத் தெரிவிக்கும் இந்தியப் பேரரசு கச்சத்தீவு தொடர்பாக எவ்வளவு கவனத்தில் இருந்திருக்க வேண்டும்.

**காரணம் என்ன?**

எந்தவிதமான ஆதாரத்தின் அடிப்படையிலும், சான்றுகளின் ஆதரவாலும் இந்திய அரசு கச்சத் தீவை இலங்கைக்கு அளிக்கவில்லை. இராமநாதபுரம் மன்னருக்கு உரித்தான கச்சத்தீவு இந்திய அரசோடு இராமநாதபுரம் சமஸ்தானம் இணைந்தபோது இந்தியாவோடு சேர்ந்துவிட்டது. இதனை இந்திய அரசும், அப்போதைய பிரதமர் நேருவும் பின்னர் வந்தவர்களும் உணரவே இல்லை.

அன்று எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் இதனைச் சட்டசபையில் எழுப்பும் போதெல்லாம் காங்கிரஸ் அரசு இப்பிரச்சினையில் ஆர்வமோ , தீவிரமோ காட்டாமல் கச்சத்தீவுப் பிரச்சினை இந்திய வெளியுறவுத் துறை தொடர்பானது. மாநில அரசு செய்வதற்கு ஒன்றும் இல்லை என்று கூறிவிட்டது.

ஒரு முறை வெளியுறவுத் துறை இணை அமைச்சராக இருந்த ஸ்வெல் 'கச்சத்தீவு இந்தியாவின் கையில் இருக்கிறதா? இலங்கையின் கையில் இருக்கிறதா? என்று தெரியவில்லை' என்றார்.

நேருவும், இந்திராவும் பொறுமை தேவை. அண்டை நாட்டுடன் உறவை முறித்துக் கொள்ளக் கூடாது என்று கூறினர்.

1973ஆம் ஆண்டு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இலங்கை சென்றார். அதன்பிறகு இரு நாடுகளின் அதிகாரிகள் கூடிப் பேசினர். 1974 இல் சிரீமாவோ பண்டார நாயகா இந்தியா வந்தார். பேசிய பேச்சுக்கள் அகதிகள் தொடர்பானது மட்டும் அல்ல ; இரு நாட்டு எல்லைப் பிரச்சினைகட்கும், கச்சத்தீவுப் பிரச்சினைக்கும் இந்தியாவுக்கு எதிரான முடிவு கட்ட அப்பேச்சு வழி வகுத்தது.

இந்தியா தன் அண்டை நாடுகளுடன் சமாதான சகவாழ்வு வாழும் கொள்கையை வகுத்தது. இந்தியாவின் இக்கொள்கையால் கச்சத்தீவு கைமாறியது. அண்டை நாட்டின் நட்புக்காக, உறவுக்காக தமிழகத்தின் பாரம்பரியச் சொத்தாகிய கச்சத்தீவை இந்தியா இலங்கைக்குத் தாரை வார்த்து விட்டது.

### இந்தியாவுக்கு ஆதாயமா?

கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் பலநூறு ஆண்டுகளுக்குப் போதுமான எண்ணெய் வளம் இருப்பதைச் சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

'கச்சத்தீவு இலங்கைக்கு அளிக்கப்பட்டிருப்பதன் மூலம் எண்ணெய் வளமுடைய மேற்கண்ட கடல் பகுதிகள் இந்திய நாட்டின் எல்லைக்கு உட்பட்டதாக வரையறை செய்யப்பட்டுள்ளது. மிகமிக அத்தியாவசியமான எண்ணெய் வளத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே ஒரு பயனும் இல்லாத கச்சத்தீவை இலங்கைக்கு விட்டுத்தரும் புத்திசாலித்தனமான முடிவை இந்திய அரசு எடுத்தது.

அதன்படி கச்சத்தீவுப் பகுதியில் உள்ள எண்ணெய் வளமுள்ள கடல் பகுதியின் உரிமையை இந்தியா எடுத்துக் கொள்ளும். நமக்குத் தேவை எண்ணெய் வளமுள்ள கடல் பகுதியே தவிர வெறும் மண் திட்டான கச்சத்தீவு அல்ல'. இக்கருத்தை திரு. செம்பியன் அவர்கள் கூறியுள்ளார். (சாணக்கியன், செப் 1.15.1991).

கச்சத்தீவுக்கு மேற்கே நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லைப் பகுதியில் கூட தமிழக மீனவர்களை அனுமதிக்காத இலங்கை அரசு, பரம்பரை பரம்பரையாக வழிபாட்டு உரிமை கொண்ட கச்சத்தீவு அந்தோணியார் கோயிலுக்குத் தமிழக யாத்ரிகர்களை அனுமதிக்காத இலங்கை அரசு தன் எல்லைக்குள் உள்ள எண்ணெய் வளம் மிக்க கடல் பகுதியை இந்தியா எடுத்துக் கொள்ள அனுமதிக்கும் என்று கூறுவது வேடிக்கையாகவும் வியப்பாகவும் உள்ளது. கச்சத்தீவு தொடர்பாக உறுதியுடன் இருந்த திரு.செம்பியன் மேற்கண்டவாறு எழுதியதன் பின்னணி தெரியவில்லை.

**பாக் நீரிணைப்பு**

பாக் நீரிணைப்பு இயற்கை அன்னை இந்தியாவிற்கு அளித்திருக்கும் பெருங்கொடை. அது 9°-10° அகலாங்கியிலும், 80°-90° நீளாங்கியிலும் அமைந்துள்ளது.

1755 - 1763 ஆம் ஆண்டுகளில் சென்னைக் கவர்னராக இருந்த சர் ராபர்ட் பாக் என்பாரின் நினைவாக அப்பகுதிக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. வடக்கே கோடியக்கரையையும், கிழக்கே இலங்கைத் தலைமன்னாரையும், தெற்கே ஆதாம் பாலத் திட்டுக்களையும், மேற்கே தமிழகக் கடற்கரையையும் எல்லையாக உடையது.137 கி.மீ. நீளத்தையும் 64 முதல் 137 கி.மீ. வரை அகலத்தையும் உடையது.

பாக் நீரிணைப்பின் கீழ் மூன்று நீரோட்டக் கால்வாய்கள் உள்ளன என்பர். இப்போது ஒரு கால்வாய் மட்டுமே ஆழமாக உள்ளது. அதுவும் மண் மேடிட்டு வருகிறது.

தமிழகத்திற்குப் புயல் வராமல் காப்பது பாக் நீரிணைப்பு. வருடம் முழுவதும் மீன் வளத்தை நிலையாகப் பெற்றுத் தருவது பாக் நீரிணைப்பு. கடல் நீரோட்டத்தை அது முறைப்படுத்துகிறது. ஆயினும் இயற்கையாகவே பிற பகுதிகளிலிருந்து கடல் அலைகள் கொண்டு வரும் மணல்கள் பாக் நீரிணைப்பில் நிலைத்து வருகிறது.

தமிழக மணமேல்குடிப் பகுதியில் 10 மீட்டர் கடல் ஆழம் இப்போது 4 மீட்டராகக் குறைந்துவிட்டது. இப்படியே இருக்குமானால் கி.பி.2040 ஆம் ஆண்டு ஒருவர் நடந்தே இலங்கைக்குப் போய்விடலாம் என்கிறார் கடலியல் ஆய்வாளர் டாக்டர் விக்டர் ராஜமாணிக்கம் அவர்கள். கடல் கரைகளில் உள்ள பவளப்பாறைத் திட்டுக்கள் அழிவதன் மூலமும் கடலில் மணல் சேகரமாகிறது.

அதன் காரணமாகக் கச்சத்தீவுப் பகுதியில் மணல் குவிக்கப் படுவதின் காரணமாகக் கச்சத்தீவு பெரிதாக வாய்ப்புள்ளது. உலக நாடுகள் எல்லாம் தம் கடல் எல்லையை விரிவுபடுத்திப் பல்வேறு ஆதாயங்களைப் பெறும்போது இந்திய அரசு எடுத்த முடிவால் நிலத்தடியிலும், நீரிலும், வானிலும் இந்தியா, தன் எல்லையை இழந்துள்ளது.

**மீனவர்கள் சோகக் கதை**

தமிழகத்தின் கிழக்குக் கரையோரமுள்ள இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை மாவட்டங்களைச் சேர்ந்த 20000 மீனவர்கள் மீன் பிடிக்கும் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். இதைத் தவிர 50000க்கும் மேற்பட்டோர் மீன்பிடிக்கும் தொழில் மூலமாக நேரடியாகவோ மறைமுகமாகவோ தொழில் நடத்தி அதன்மூலம் வருவாய் ஈட்டி வாழ்ந்து வருகின்றனர்.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் நாட்டுப் படகு, கட்டுமரம், விசைப்படகு ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். 1974இல் கச்சத்தீவு இலங்கைக்குக் கொடுக்கப்பட்டு, 1976இல் மீன்பிடிக்கும் உரிமையும் மறுக்கப்பட்ட பிறகு தமிழக மீனவர்கள் பல்வேறு பெருந்துன்பங்களை அனுபவித்த போதிலும் அண்மைக் காலங்களில் அவை உச்சகட்டத்தை அடைந்துள்ளன.

1983க்குப் பின் வீரம் மிக்க ஈழப் போராளிகளின் மீது இலங்கை இராணுவத்தின் காட்டுமிராண்டித் தாக்குதல் தொடங்கியபின் தமிழக மீனவர்களுக்குத் தொல்லை மிக அதிகம் ஆயின. ஈழப்போராளிகளின் வீரமிக்க விடுதலைப் போராட்டம் சில முனைகளில் பின்னடைவு ஏற்படுவதற்குக் காரணம் கச்சத்தீவு இலங்கைக்கு உரிமையாக்கப்பட்டதும் ஒரு காரணமாகும்.

கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் இலங்கை ராணுவம் சுமார் 380 முறை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. 170க்கு மேல் தமிழக மீனவர்கள் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது. பல்லாயிரக் கணக்கானவர்கள் படுகாயமடைந்து ஊனமுற்றிருக்கின்றனர். சுமார் 100 படகுகள் எரிக்கப்பட்டுள்ளன, அல்லது அழிக்கப்பட்டுள்ளன. பல பெருஞ்சேதம் அடைந்துள்ளன. பல அவர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனால் தமிழக மீனவர்கள் குடும்பம் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளது. ஏழை எளிய மீனவர்கள் தாங்கொணாத் துயரமடைவது இன்னும் தொடர்கிறது.

தன் நாட்டின் குடிமக்களில் ஒருவர் தகுந்த காரணம் இல்லாமல் தாக்கப்படும்போதோ, கொல்லப்படும்போதோ அந்நாடு உலகளாவிய பெரும்போரை அதன்பொருட்டுச் சந்தித்துள்ளது. இந்திய அரசு ஏன் எம்முயற்சியும் எடுக்கவில்லை. தாக்கப்படுகின்றவர்கள் தமிழர்கள் என்பதாலா?

பல மீனவர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுப் பல நாட்கள் கடுஞ்சிறையில் வாடி சொல்லொணாத் துயருடன் பசியிலும், நோயிலும் பாதிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவற்றில் இந்திய எல்லை சரியாகத் தெரியாமல் சிறிது தொலைவு இலங்கைப் பகுதிக்குள் சென்றுவிடும் மீனவர்கள் மீதும், இயற்கையின் சீற்றத்தால் எல்லை கடந்துவிடும் மீனவர்கள் மீதும் பல தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதால் இந்தியக் கடல்படையும், இந்தியக் கடலோரக் காவல்படையும் தமிழக மீனவர்கட்குத் தக்க பாதுகாப்பு அளிக்க முன்வருவதில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு. தமிழக மீனவர்கள் கச்சத்தீவுப் பகுதியின் அருகில் சென்றாலே அதிக மீன்கள் கிடைக்கின்றன என்று கூறுகின்றனர்.

1974ஆம் வருட ஒப்பந்தப்படி இலங்கை அரசின் அனுமதியின்றிக் கச்சத்தீவுப் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லலாம் என்பது இவர்கள் வாதம்.

இத்தாக்குதல்கள் காரணமாக தமிழக மீனவர்கள் கச்சத்தீவுப் பகுதிகட்கு மீன் பிடிக்கச் செல்லுவதை அறவே நிறுத்திவிட்டார்கள். இலங்கைக் கடல் பகுதியின் அருகே சென்று மீன் பிடிக்காமல் இந்திய எல்லைக்குள் மட்டும் மீன் பிடித்து வருவதால் மீன்பிடி வருவாய் மிகவும் குறையத் தொடங்கிவிட்டது.

படகு உரிமையாளர்கள் பலர் மீன்பிடித் தொழிலைத் தற்காலிகமாகவும், சிலர் நிரந்தரமாகவும் விட்டுவிட்டனர். சில படகு உரிமையாளர்கள் தம் விசைப் படகுகளை விற்றுவிட்டு மாற்றுத் தொழில்களில் ஈடுபட முனைந்துவிட்டனர். இராமநாதபுர மாவட்டப் பொருளாதார நிலையே நிலைகுலைந்து விட்டது.

இதனால் இராமநாதபுரம் புதுக்கோட்டை, நாகை மாவட்டங்களில் 10000 பேர்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. பலர் வேலை இழந்து தவிக்கின்றனர். மீன் பிடிக்கச் செல்லும் சிலரும் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பின்றி அல்லல்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கிறார்கள்.

இறால் மீன் ஏற்றுமதி நிறுவனங்கள் கச்சத்தீவுப் பகுதியில் கிடைக்கும் இறால் மீன்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்கிக் கொள்ளத் தயாராக உள்ளன. ஆனால், அப்பகுதியில் இறால் மீன்பிடிப்போ பாதியாகக் குறைந்துவிட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயக் கூலிகள் மழை பெய்யாமல் வறட்சி ஏற்படும் காலங்களில் மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொள்வர். இப்போது பரம்பரை மீனவர்களே பரிதாப நிலைக்கு ஆளாகும்போது பிற தொழிலாளர்கள் மீன்பிடி தொழில் மேற்கொள்ள முடியாமல் வாடுகின்றனர். வருவாய் இழக்கின்றனர்.

மீன் பிடிக்கச் செல்லும் படகுகள் வாராவாரம் குறைந்து கொண்டே வருகின்றன. மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் அனைவரும் அச்சத்தின் பிடியில் வாழ்ந்து வருகின்றனர். இந்தியப் பேரரசு இதுவரை தகுந்தபாதுகாப்பு எதுவும் அளிக்கவில்லை. நிகழ்ச்சிகள் ஏற்படும்போது மீனவர் சங்கங்கள் தம் கடும் எதிர்ப்புகளைப் பலவழிகளில் காட்டுகின்றன. இலங்கை அதிபர்க்குத் தந்திகளும் பலமுறை கொடுத்துள்ளனர். இந்திய அரசாங்கமும் உரிய, தேவையான மிகக் கடுமையான கண்டனங்களைத் தெரிவிப்பதில்லை. மீனவர்களின் உயிரும், உடைமையும் பறிக்கப்படும் போதெல்லாம் தமிழக அரசு பாதுகாப்பு வேண்டுகோளை விடுக்கும். அவை செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆவதே வழக்கம்.

இந்தியப் பாராளுமன்றத்திலும் தமிழக மீனவர்கட்குத் தொல்லைகள் ஏற்படும்போது எல்லாம் கடுமையான கண்டனக் கணைகள் எழும். தமிழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து தமிழக மீனவர்களைக் காக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்பர்; உடனே நடவடிக்கை எடுப்பதாக இந்திய அரசு பதில் மட்டும் அளிக்கும். தீவிர நடவடிக்கை எதுவும் இருக்காது.இப்பாதிப்பை நிறுத்த இன்னும் வலிமையான கண்டனக்குரல் எழவேண்டும். அவை டில்லியின் காதுகளில் ஒலிக்க வேண்டும்.

1991 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ஆம் தேதி தமிழக மீனவர்களைக் காக்க இந்தியக் கடற்படைக்கு உத்தரவிட வேண்டும் என்று பாராளுமன்றத்தில் செ.மாதவன் கேட்டார். வை.கோபால்சாமி, பழனியாண்டி ஆகியோரும் அதை ஆதரித்துக் குரல் எழுப்பினர்.

அன்றைய தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதா 1991 ஆகஸ்டு மாதம் விடுதலை நாளில் சென்னைக் கோட்டையில் கொடியேற்றி உரை நிகழ்த்துகையில் கச்சத் தீவை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

1991 அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி தமிழகச் சட்டமன்றத்தில் கச்சத் தீவை இலங்கையிடமிருந்து மீட்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசின் சார்பில் மைய அரசுக்குக் கடிதமும் எழுதப்பட்டது.

இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் ஃபாலிரோ கச்சத்தீவு தொடர்பான இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யும் உத்தேசம் இந்திய அரசுக்கு இல்லை என்று 1991 நவம்பரில் இந்திய மாநிலங்கள் அவையில் தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் செ.மாதவன் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினார். 1976 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் அனுமதியில்லாமல் தமிழக மீனவர்கள் கச்சத்தீவுப் பகுதிக்குப் போகக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது ; அதை நீக்கி தமிழக மீனவர்கட்கு அங்கு மீன்பிடிக்கும் அனுமதியைப் பெற்றுத் தருமாறு அவர் கேட்டார்.

உங்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படுகிறது என்று இந்தியப் பிரதமர் பதில் அளித்தார். என்று பரிசீலனை முடியுமோ தெரியவில்லை.

கடல் வாழ்வை அறியாத உத்தரப் பிரதேச, மத்தியப் பிரதேச, ராஜஸ்தான், டில்லி வாசிகட்குத் தமிழக மீனவர்கள் படும் தாங்கவொண்ணாத் துயர் தெரிய நியாயமில்லை.

வாட்ஜ் பேங் என்னும் இந்தியக் கடல் பகுதியில் இலங்கை மீனவர்கள் மீன் பிடிக்கத் தேவையான உரிமையை (லைசென்ஸ்) இந்திய அரசு அளித்துள்ளது. இதேபோல தமிழக மீனவர்கட்குக் கச்சத்தீவுப் பகுதியிலும், இலங்கை எல்லைகளிலும் மீன்பிடிக்க உரிமைகள் வழங்கப்படவேண்டும். அதுவே நியாயம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தெற்கு, தென்கிழக்கு ஆசியக் கல்வி மைய இயக்குநர் பேராசிரியர் வி. சூரியநாராயணன் நீண்ட காலக் குத்தகைக்குக் கச்சத் தீவைப் பெறலாம் என்ற கருத்தை 1994 பிப்ரவரி மாதம் தெரிவித்தார். மேற்கு வங்காள மாநிலத்தின் தீன்பிகா பகுதியை நீண்ட காலக் குத்தகைக்கு மீன் பிடிப்பதற்காக இந்தியா வங்கதேசத்திற்கு அளித்துள்ளதை அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

இதே கருத்தை இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த தாமஸ் ஆபிரகாமும் குறிப்பிட்டுள்ளார்.

இதனைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட மத்திய அரசின் வெளியுறவுத்துறை திட்டம் ஒன்றைத் தயாரித்து இலங்கையுடன் பேசியதாகத் தெரிகிறது. இன்றுவரை முடிவு ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இன்னும் சற்று ஒற்றுமையாக - வலிமையாகத் தமிழகத்தின் குரல் ஓங்கி ஒலிக்குமானால் டெல்லிக்கு அது எட்டி தமிழக மீனவர்களின் பரம்பரை உரிமை ஓரளவேனும் பாதுகாக்கப்படலாம். தமிழக அரசும், தமிழகக் கட்சிகளும், தமிழக மக்களும் தம் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு இம்முயற்சியில் ஈடுபட்டு மீனவர் துயர் துடைக்க வேண்டுகிறோம். நாளை என்று ஒத்திப்போடாமல் இன்றே காரியத்தில் இறங்குவது நல்லது.

22.1.1997 அன்று தமிழகச் சட்டசபையில் உரையாற்றிய தமிழகக் கவர்னர் கிருஷ்ணகாந்த் அவர்கள் கச்சத்தீவு அருகில்

தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையும், அந்தோணியார் கோயிலுக்குத் தமிழக யாத்ரிகர்கள் செல்லும் உரிமையும் மீண்டும் கிடைக்க மத்திய அரசைத் தமிழக அரச வற்புறுத்தும் என்று கூறியுள்ள செய்தி ஆறுதல் தருகிறது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இதுதொடர்பாக தீவிர முயற்சி எடுத்தால் ஐக்கிய முன்னணி அரசில் ஏற்ற பலன் கிடைக்கும்.

**சின்னஞ்சிறு பகுதிகள் - பெரிய பிரச்னைகள்**

கச்சத் தீவுபோல் சிறு பகுதிகளின் உரிமைக்காகப் பெரிய பெரிய நாடுகள் விட்டுக் கொடுக்காமல் உரிமை கொண்டாடியுள்ளன. சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளன. போரிலும் ஈடுபட்டுள்ளன. அவை சிறு தீவுதானே, சிறு பகுதிதானே என்று வாளாவிருக்கவில்லை. அந்நாடுகள் தன் நாட்டுப் பகுதிமீது தன் உரிமையை நிலைநாட்டியுள்ளன என்பதையே காணுகிறோம்.

(அ) ஐரோப்பாக் கண்டத்தில் ஆங்கிலக் கால்வாயில் பிரிட்டிஷ் கடற்கரைக்கும், பிரெஞ்சு நாட்டின் கடற்கரைக்கும் இடையே மின்கொயர்ஸ் - எக்ரௌ (Minquires and Ecrahov) என்ற தீவுப்பாறைக் கூட்டங்கள் உள்ளன.

அவை இங்கிலாந்தை விட்டு நெடுந்தொலைவிலும் பிரெஞ்சு நாட்டின் அண்மையிலும் இருந்தன. தன் சர்வதேச எல்லைக்கு அருகே இருப்பதால் அவை தனக்கே சொந்தம் எனப் பிரெஞ்சு நாடு வாதாடியது. பிரிட்டன் அவை தனக்கே உரியவை எனப் பழைய ஆதாரங்கள் சிலவற்றைக் காட்டின.

சர்வதேச நீதிமன்றத்தில் 1953 இல் அவ்வழக்கு வந்தது. தீர்ப்பு ஆவணங்களின் அடிப்படையில் பிரிட்டனுக்கே சாதகமாக அமைந்தது.

(ஆ) கிளிப்பர்டன் (Clipperton) என்னும் சிறு தீவைப் பற்றி பிரான்சு நாடும் மெக்சிகோவும் உரிமை கொண்டாடின. அத்தீவு மெக்சிகோவின் அருகில் பிரான்சைவிட்டு நெடுந்தொலைவில் இருந்தது. பிரான்சு நாட்டினர் அங்கு வருவதில்லை என்ற காரணம் காட்டி மெக்சிகோ அத்தீவு தனக்கே சொந்தம் என்றது.

இரண்டு நாடுகளுக்கும் இது குறித்துப் போரே ஏற்பட்டது. சர்வதேச நீதிமன்றம் இதுகுறித்து விசாரித்து அத்தீவைப் பிரான்சுக்கு வழங்கியது.

*(இ) பிலிப்பைன்சு நாட்டின் அருகே பால்மஸ் மியான்ஜஸ்* (Palmas Mianges) *என்னும் தீவு ஸ்பெயின் வசம் இருந்தது. திடீரென்று ஒருநாள் அத்தீவை ஸ்பெயின் அமெரிக்காவுக்கு அளித்துவிட்டது. அத்தீவின் உரிமையை முன்பு பெற்றிருந்த நெதர்லாந்து சர்வதேச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இறுதியில் அந்தத் தீவின் உரிமையை நெதர்லாந்து பெற்றது.*

*(ஈ) தென் அமெரிக்காவில் பொலிவியாவிற்கும் பாராகுவேவுக்கும் இடையில் சாக்கோ என்ற சிறு பகுதி உள்ளது. இந்தப்பகுதி யாருக்குச் சொந்தம் என்பதில் இந்த இரு நாடுகளுக்கும் இடையே பூசல் இருந்து வந்தது.*

*1932இல் பாராகுவே ஒரு தபால்தலை வெளியிட்டது. அதில் பாராகுவே நாட்டின் பகுதியாக சாக்கோ சித்தரிக்கப்பட்டிருந்தது.*

*இதைக் கடுமையாக எதிர்த்து பொலிவியா பாராகுவே நாட்டின் மீது படை எடுத்துத் தாக்கியது. மூன்றாண்டு காலம் நடைபெற்ற இப்போரில் 10ஆயிரம் சிப்பாய்கள் இறந்தனர்.*

*பின்னர்,சமாதானம் ஏற்பட்டுச் சாக்கோவின் 90 சதவிகிதம் பாராகுவேவுக்கும், மீதி பொலிவியாவிற்கும் கிடைத்தது.*

*(உ) வியட்நாம் அருகில் அதற்குச் சொந்தமான பாரசெல் தீவுத் துணுக்குகள் உள்ளன. அதனுடைய முக்கியத்துவம் கருதி சீனநாடு அதனை வலியப் பறித்துக் கொண்டது.*

*(ஊ) பசிபிக் கடல் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ள வேக், எல்லிஸ்* (Wake, Ellice) *போன்ற சின்னஞ்சிறு தீவுகள் இன்றியமையாதனவாக இருந்தன. ஜப்பானும், அமெரிக்காவும் 1943-44-ல் போட்டி போட்டுக் கொண்டு அச்சிறு தீவுகளில் இராணுவத் தளங்களை அமைத்தன.*

*(எ) 1942 ஜூன் 3 ஆம் தேதி மிட்வே* (Midway) *என்னும் சிறு தீவில் இருந்த அமெரிக்க இராணுவ தளத்தின் மீது ஜப்பான் மாபெரும் தாக்குதலை நடத்தியது. பசிபிக் கடலை ஆக்கிரமிக்க மிட்வே என்னும் தீவைக் கைப்பற்றுவது அவசியம் என ஜப்பான் கருதியது.*

*(ஏ) பொதுவுடமை நாடுகளான சோவியத் யூனியனும், சீனாவும், குரெயில் தீவுகட்காகப் போரிட்டுக்கொண்டன. அதில் இறந்த*

*20 சோவியத் வீரர்கள் படத்தை உலகம் முழுவதும் அன்றைய சோவியத் அரசு காட்டியது.*

*(ஐ) வங்காள தேச எல்லைக்குள் புதியதாகத் தோன்றிய நியூமூர் தீவுக்கு இந்திய அரசு உரிமை கொண்டாடத் துடிக்கிறது. ஆனால், தன் சொந்தத் தீவை - கச்சத் தீவை இழந்துவிட்டது.*

## ஈரோட்டில் கருத்தரங்கு

*ஈரோட்டில் 30.6.1974 அன்று கச்சத்தீவு பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இக்கட்டுரையாசிரியர் தன்னந்தனியாகவே அதற்காகக் கடும் முயற்சிகளை மேற்கொண்டார். இராமேசுவரம், இராமநாதபுரம் மாவட்டத்தின் பல பகுதிகள், இராமநாதபுரம் சேதுபதி அரண்மனை, மதுரை ஆகிய இடங்களுக்குப் பலமுறை பயணம் செய்து கச்சத்தீவு பற்றிய செய்திகள் சேகரித்தார். மதுரையில் பத்திரிக்கையாளர் கூட்டம் ஒன்றையும் நடத்தினார். செய்திகளை வெளியிட்டார். பல இதழ்கள் அச்செய்திகளை முக்கியத்துவத்துடன் வெளியிட்டன.*

*பின் அதற்காக இருமுறை இலங்கை சென்று தனக்கு வந்த ஆபத்துக்களையும், கண்காணிப்பையும் பொருட்படுத்தாமல் பல குறிப்புகளைச் சேகரித்தார். கச்சத்தீவுக்கும் நேரில் சென்று பார்த்து வந்தார். தமிழகத்தின் சொத்து கச்சத் தீவு என்பதை உணர்ந்து ஈரோட்டில் கருத்தரங்கும், கண்காட்சியும் நடத்தினார். ஈரோட்டில் நடைபெற்ற பெரிய நிகழ்ச்சிகளில் அது ஒன்றாக அமைந்தது. பத்திரிக்கைகள் அப்போது நன்முறையில் செய்திகளைப் பிரசுரித்தன. 'கச்சத்தீவு மீட்புக்குழு' என்பதை ஏற்படுத்துவதாகவும் அறிவித்தார். தக்க துணை இல்லாத காரணத்தால் அவர் முயற்சியைக் கைவிட வேண்டியதாயிற்று.*

*கருத்தரங்குக்கு ' கச்சத்தீவு, ஈரோடு' என்று தந்தி முகவரி அளிக்கப்பட்டிருந்தது. இராமநாதபுரம் அரசர் திரு. ராஜா இராமநாத சேதுபதி அரசர் அவர்கள் (1967-1979) உட்படப் பலர் வாழ்த்துத் தெரிவித்திருந்தனர்.*

*அப்போது பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய திரு.வலம்புரிஜான், திரு.ஜி.விசுவநாதன், உலகத்தமிழ் இளைஞர் பேரவைச் செயலர் திரு.ஜனார்த்தனம், சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு.மு.சின்னசாமி,*

திரு. க.ர. நல்லசிவம், திரு.மா.சுப்பிரமணியம் போன்றவர்கள் சான்றுகளைப் பார்வையிட்டுப் பாராட்டினர்.

**'சேதுபதி ஆண்ட சீமை**
**சிங்களத்திற்கு உரிமையா?'**

**'கச்சத்தீவைக் காத்தே தீருவோம்'**

என்ற முழக்க உரைகள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் எழுதப்பட்டன. வீதிகளில் துணிப்பதாகைகள் மூலம் அத்தொடர்கள் காட்சியளித்தன. பொதுமக்கள் கச்சத்தீவு பற்றிய உண்மைகளை ஓரளவு அறிந்தனர்.

## கொடியேற்றும் முயற்சி

ஈரோட்டுக் கருத்தரங்கின் எழுச்சி காரணமாக 15-8-1974 அன்று கச்சத்தீவு சென்று இந்திய சுதந்திர தினத்தன்று இந்திய தேசியக் கொடியை ஏற்றும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பெற்றது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமரர் .திரு. க.ர. நல்லசிவம் அவர்கள் முன்னின்று நடத்திய இம்முயற்சியில் பலநூறு ஆர்வமிக்க தொண்டர்கள் கலந்து கொண்டனர். ஈரோடு கருத்தரங்கின் மூலமாகவே இவ் எழுச்சி ஏற்பட்டதாக திரு.க.ர.நல்லசிவம் கூறினார். மதுரை முன்னாள் மேயர் திரு.முத்து அவர்கள் கச்சத்தீவு செல்லப் படகு ஒன்றையும் ஏற்பாடு செய்வதாக வாக்களித்தார். ஏற்பாடும் செய்தார்.

ஆனால், அன்று இராமேசுவரத்தில் எல்லாப் படகுகளும் மீன் பிடிக்கச் செல்லாமல் நிறுத்தப்பட்டன. திரு.க.ர.நல்லசிவம் உட்படக் கொடியேற்றச் சென்ற தொண்டர்கள் பலரும் இராமேசுவரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டுக் கைதானார்கள். இக்கட்டுரையாளரும் அவர்களுடன் இராமேசுவரம் சென்றார். கச்சத்தீவில் கொடியேற்றும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

## முடிவுரை

இந்தியநாடு அன்னிய மண்ணுக்கு ஒருபோதும் ஆசைப்பட்டதில்லை. அதுபோல இந்திய மண்ணுக்கு அன்னியநாடு எதுவும் ஆசைப்படக்-கூடாது. ஆதாரங்கள் அடிப்படையில் இல்லாமல் நட்பை விரும்பிக்

கொடுக்கப்பட்ட தமிழகத்திற்குரிய கச்சத்தீவை இன்றைய சூழ்நிலையில் இந்தியப் பாதுகாப்புக் கருதியும், கச்சத்தீவை அளித்ததால் சொல்லொணாப் பெருந்துயருக்கு ஆளாகியிருக்கும் இராமநாதபுர மாவட்ட மீனவர்களின் நலன் கருதியும் இலங்கையிடமிருந்த மீளப் பெறுவது மிகமிக அவசியமாகிறது.

இன்றில்லாவிட்டால் நாளை ; நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள் கச்சத்தீவு மீட்பு முயற்சிகள் தமிழகத்தில் நடந்தேயாக வேண்டும்.

சிங்கள அரசுக்கு அநியாயமாக, ஆதாரமில்லாமல் அளிக்கப்பட்ட சேதுபதியின் சீமையாகிய கச்சத்தீவு தமிழர்கள் அனைவரின் மனங்குளிரும் வண்ணம் மீண்டும் தமிழகத்திற்கு உரிமையாகும் நாள் தமிழக வரலாற்றில் ஒரு பொன்னாளாகும். அந்நாள் மிக அண்மை நாளாக அமைய வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். அதற்குத் தமிழக மக்களைத் தூண்டும் பெருமுயற்சியில் மிகச்சிறு அளவு பணியையேனும் இந்நூல் செய்யும் என்று நம்புகிறேன்.

தமிழகத் தலைவர்கள் இதற்கான முயற்சியை உடனே மேற்கொள்ளுவார்களாக !

## பிற்சேர்க்கை - 1

பதிவு எண் - 510/80

2-7-1880

1 புத்தகம் - 16ஆம் வால்யூம் - ரிஜிஸ்டர்

பத்திரத்திற்கு நகல்

(7ரூ. முத்திரைத் தாளில் எழுதப்பட்டுள்ளது)

1880 ஆம் வருஷம் சூன் மாதம் 23 ஆம் தேதி மதுரை டிஸ்டிரிக்கு ரிஜிஸ்தார் சரகத்து இராமநாதபுரம் சப் டிஸ்டிரிக்கு இலாக்கா இராமநாதபுரத்திலிருக்கும் மதுரை ஜில்லா ஸ்பெஷல் கலெக்டர் எட்வர்டு டர்னர் துரையவர்களுக்கு மேற்படி இராமநாதபுரம் டிஸ்டிரிக்குக்குச் சேர்ந்த கீழக் கரையிலிருக்கும் சோனக ஜாதி சாயபு மாப்பிள்ளை மரைக்காயர் குமாரர் வியாபாரமும் விவசாயமும் ஜீவனம் முகம்மது அப்துல் காதர் மரைக்காயர் 1 இராமசாமிப்பிள்ளை மகன் விவசாய ஜீவனம் முத்துச்சாமிபிள்ளை 2 பேரும் எழுதிக் கொடுத்த கறார் நாமா. என்னவென்றால் இராமநாதபுரம்

ஜமீன்தாரியைச் சேர்ந்த சாயவேர்களின் பிரத்யேகமாய்க் குத்தகை ஏற்பட்டிருக்கிற ஏர்வாடி கிராமம் மேல்பக்க எல்லைக்கும், மேல்பக்கமிருக்கிற பாலையார் முதல் வேம்பாத்து கீழ்ப்பக்கம் வரையிலும் அதற்குள்ளடங்கிய தீவுகளும் நீங்கலாக இத்துடன் சேர்ந்திருக்கிற நான்கெல்லை ஜாப்தாவில் அடங்கிய மேற்படி பாலையாத்துக்குக் கீழ்ப்பக்கம் முதல் இராமநாதபுரம் பாம்பன், முதுகுளத்தூர், திருவாடானை, சப் ரிஜிஸ்திராருக்குச் சேர்ந்த சாலைக்கரை வட்டகையென்று ஆத்தங்கரை, இராமேசுவரம், ஏர்வாடி, திருப்பாலைக்குடி, வகையறாவிலும் அதற்குள்ளடங்கின தீவுகளிலும் உண்டாகிற சாயவேர்களை இராமநாதபுரத்தில் உசூராபீசில் துரையவர்கள் முன்பாக நாளது மாதம் 21ஆம் தேதி இஸ்தியாரின் நிபந்தனையையும் உச்சரித்து யேலங் கூறினதில் கடோசியாக பசலி ஒன்றுக்கு ரூ.700/- இந்த ஏழுநூறு வீதம் 1290 ஆம் பசலி முதல் 1294ஆம் பசலி வரை பசலி 5க்கு எங்களில் முத்தசாமிபிள்ளையாகிய நான் ஏலத்தில் ஒப்புக் கொண்டு அதற்காக 1 பசலி குத்தகைத் துகையில் கால்வாசி துகை ரூ.175/- தேதி 21ல் டேவணியாகச் செலுத்தியிருப்பதால் மேற்படி தீவு வகையறாக்களில் உண்டாகும் சாயவேர்களை நாங்களிருவரும் மேற்படி 1290ஆம் பசலி முதல் 1294 ஆம் பசலி வரை அனுபவித்துக் கொண்டு ஒவ்வொரு பசலிக்கும் ஏற்பட்டிருக்கும் மேல்கண்ட குத்தகைத் துகையை கிஸ்தி பந்திப் பிரகாரம் நாங்களிருவரும் செலுத்திவர வேண்டியது. டேவணித் துகையை கடோசிப் பசலி வாயிதாவுக்குச் செல்வைத்துக் கொள்ளவும். எந்தப் பசலியிலாவது கிஸ்தி வாயிதாப் பிரகாரம் பணம் செலுத்தத் தவறினால் தவறின தேதி முதல் மாதம் 1-க்கு 100க்கு ஒரு ருபாய் வீதம் வட்டி சேர்த்திக் குடுக்கவும். அப்படியாவது பசலி வகையறாக்குள் அந்தந்தப் பசலி குத்தகைத் துகையைப் பூரா செலுத்தி விடாத அடுத்த பசலி குத்தகை பாத்தியதையையும் டேவணியையும் இழந்து விடவும் மறு ஏலம் கூறினதில் நஷ்டம் சம்பவித்தால் அந்த நஷ்டத்திற்கு உத்திரவாதம் செய்யவும் அனுபவித்த பசலிகளுக்குள்ள குத்தகைத்து கையை நிலுவையிருந்தால் செல்லாகும் தேதி வரை வாயிதா தவறின தேதி முதல் மேல்கண்டபடி வட்டி சேர்த்துச் செலுத்தவும் நாங்களும் எங்களுடைய வாரிசுகளும் பிரதிநிதி வகையறாவும் உத்திரவாதியாக இருப்போம்.

**கிராமாந்தரங்களுக்கு விபரம்.**

மதுரை டிஸ்டிரிக்கு பாம்பன் சப் டிஸ்டிரிக்கு சேகரத்தில் மன்னாரு கரைக்கும் மேற்கு வட சமுத்திரத்திற்கும் தெற்கு சொக்கம்பிள்ளை மடத்திற்கும் கூத்தன்புளிக்கும் முட்டக்கோன்

வலசைக்கும் கிழக்கு குத்துக்கால் தீவு, முயல் தீவு, மன்னாளித் தீவு தென்கரைகளுக்கு வடக்கும் இந்நான்கெல்லைகட்குட்பட்ட கிராமங்களின் விபரம்.

| | |
|---|---|
| இராமேஸ்வரம் உள்கடை உட்படக் கிராமம் | 1 |
| பாம்பன் தங்கச்சிமடம் கிராமம் | 1 |
| மண்டபம் கிராமம் | 1 |
| மரைக்கான்பட்டினம் கிராமம் | 1 |
| குஞ்சியா வலசை கிராமம் | 1 |
| அருப்புக்காடு கிராமம் | 1 |
| வேதாளை கிராமம் | 1 |
| சாத்தன்கோன்வலசை கிராமம் | 1 |
| ஆகக் கிராமங்கள் | 8 |

| | |
|---|---|
| குத்துக்கால் தீவு | 1 |
| முயல் தீவு | 1 |
| மன்னாளித் தீவு | 1 |
| கச்சத் தீவு | 1 |
| ஆக தீவு | 4 |

***(ஒப்பம்) முத்துச்சாமிபிள்ளை,***
***முகம்மது அப்துல் காதர் மரைக்காயர்.***

## *பிற்சேர்க்கை - 2*

*பதிவு எண் - 134/1885*

*ரிஜிஸ்டர் பத்திரத்திற்கு நகல்*
*(3ரூ. முத்திரைத் தாளில் எழுதப்பட்டிருக்கிறது)*

*1885ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ஆம் தேதி மதுரை டிஸ்டிரிக்கு ரிஜிஸ்திரார் சரகத்துக்கு இராமநாதபுரம் சப் ரிஜிஸ்தர் இலாக்கா இராமநாதபுரத்திலிருந்து ஆனரொரி டிப்டி கலெக்டர் அன்று மானேஜரும் இராமநாதபுரம் எஸ்டேட் மானேஜருமான டி.ராஜாராராமராயர் அவர்களுக்கு மேற்படி இராமநாதபுரம் சப் டிஸ்டிரிக்கு மேற்படி இராமநாதபுரத்திலிருக்கும் அகம்படிய ஜாதி இராமசாமிபிள்ளை மகன் விவசாய ஜீவனம் முத்துசாமிப்பிள்ளை எழுதிக் கொடுத்து கறார் நாமா.*

இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்த சாயவேர்களின் பிரத்தியேகமாய் குத்தகை ஏற்பட்டிருக்கிற ஏர்வாடி மேல்பாற்கெல்லைக்கும், மேற்பக்கமிருக்கிற பாலையார் முதல் வேம்பாத்து கீழ்பக்கம் வரையிலும், அதற்குள் அடங்கிய தீவுகளும் நீங்கலாக அடியில்கண்ட நான்கெல்லையிலடங்கிய மேற்படி பாலையாத்துக்கு கீழ்பக்கம் முதல் இராமநாதபுரம், பாம்பன், முதுகுளத்தூர், திருவாடானை சப் டிஸ்டிரிக்குச் நேர்ந்த சாலைக்கரை வட்டகையென்று ஆற்றங்கரை, இராமேஸ்வரம், ஏர்வாடி, திருப்பாலைக்குடி வகையறாவிலும் அதற்குள்ளடங்கிய தீவுகளும் உண்டாகிற சாயவேர்களை இராமநாதபுரத்தில் மேற்படி மானேஜரவர்கள் முன்பாக நாளது 85ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 30 தேதியில் மேற்படியார் நிபந்தனையையும் எச்சரித்து ஏலம் கூறினதில் கடோசியாக பசலி 1க்கு 215 ரூபாய் இந்த ரூபாய் 215 வீதம் 1295 பசலி முதல் 1299 வரை பசலி 5க்கு நான் ஏலத்தில் ஒப்புக்கொண்டு அதற்கான ஒரு பசலி குத்தகைத் துகையில் கால்வாசித்துகை ரூ.53 அணா 12 மேற்படி 30 தேதியில் டேவணியாகச் செலுத்தியிருப்பதால் மேற்படி தீவு வகையறாக்களில் உண்டாகிற சாயவேர்களை நான் மேற்கண்ட 1295 பசலி முதல் 1299 ஆம் பசலி வரை அனுபவித்துக் கொண்டு ஒவ்வொரு பசலிக்கும் ஏற்பட்டிருக்கிற மேல் குத்தகைத் துகையை கிஸ்தி பந்தல் பிரகாரம் நான் செலுத்தி வந்து டேவணித் துகையை கடோசிப் பசலி கடோசி வாய்தாவுக்குச் செல் வைத்துக்கொள்ளவும். எந்தப் பசலியிலாவது கிஸ்தி வாயிதாப் பிரகாரம் பணம் செலுத்தத் தவறினால் தவறின தேதி முதல் மாதம் ஒன்றுக்கு 100க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி சேர்த்துக் கொடுக்கவும் அந்தப்படிக்காக நாளது பசலி வகையறாக்குள் இந்தப் பசலி குத்தகைத் துகையை உத்திரவாதம் செய்யவும் அனுபவித்து பசலிக்குள்ள குத்தகைத் துகையில் நிலுவையிருந்தால் அதற்குச் செல்லாக்கும் தேதிவரை வாயிதா தவறின தேதி முதல் மேல் கண்டபடி வட்டி சேர்த்துச் செலுத்தவும் உத்தரவாதியாக இருப்பேன் என எழுதிக்கொடுத்த கறார் நாமா.

### கிராமாந்தரங்களுக்கு விபரம்

மதுரை டிஸ்டிரிக்கு பாம்பன் சப்டிஸ்டிரிக்கு சேகரத்தில் மன்னாருக்கரைக்கும் மேற்கு, வட சமுத்திரத்திற்கும் தெற்கு, சொக்கப்பிள்ளை மடத்திற்கும் கூத்தன்புளிக்கும் முட்டக்கோன் வலசைக்கும் கிழக்கு குத்துக்கால் தீவு, முயல் தீவு, மன்னாளித் தீவு தென்கரைக்கும் வடக்கு இந்நான்கெல்லைக்குட்பட்ட கிராமாந்தரங்கள் விபரம்.

| | |
|---|---|
| இராமேசுவரம் உள்க்கடை யுட்படக் கிராமம் | *1* |
| பாம்பன் தங்கச்சிமடம் உட்படக் கிராமம் | *1* |
| மண்டபம் கிராமம் | *1* |
| மரைக்கான் பட்டணம் கிராமம் | *1* |
| குஞ்சியா வலசை கிராமம் | *1* |
| அருப்புக்காடு கிராமம் | *1* |
| வேதாளை கிராமம் | *1* |
| சாத்தன்கோன்வலசை கிராமம் | *1* |
| ஆக கிராமங்கள் | *8* |

தீவுகள் விவரம்

| | |
|---|---|
| குத்துக்கால் தீவு | *1* |
| முயல் தீவு | *1* |
| மன்னாளித் தீவு | *1* |
| கச்சத் தீவு | *1* |
| ஆகத் தீவு | *4* |

**(ஒப்பம்) முத்துசாமிப்பிள்ளை**

***சாட்சி :***

*இராமநாதபுரத்திலிருக்கும் குமாரசாமிப்பிள்ளை மகன் முத்து வீரப்பிள்ளை மேற்படியூரிலிருக்கும் மேனேஜ்மெண்டாபீஸ் கிளார்க் கிருஷ்ணசாமி ஐயங்கார் இந்தக் கறார் நாமா எழுதியது.*

***பிற்சேர்க்கை - 3***

## இராமநாதபுர அரசருக்குரிய தீவு

*1913-ஆம் வருடம் ஜூலை மாதம் 1-ஆம் தேதி இராமநாதபுரம் அரசரிடமிருந்து அப்போதைய சென்னை அரசு 15 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குச் சில தீவுகளை எடுத்துள்ளது. அதில் கச்சத் தீவு உட்படச்சில தீவுகள் அடங்கியுள்ளன.*

அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*Rajah of Ramnad - The lessor*

*Right Hon. the Secretary of State for India in Councils - The lessee*

**IN PALK BAY :**

*All the Chanks, shells, beds off the mainland of the Zamindari together with those off kachcha Tivu Island and off the northen eastern coasts of Rameswaram.*

**குத்தகைத் தொகை ரூ.50,000/-**

*பிற்சேர்க்கை - 4*

**FISHERIES DEPARTMENT (MADRAS STATE)**

15/43-44

*Licence to fish with fixed engines consisting to trees, branches of trees or bushes in Palk Bay and strait adjacent to the Indian coast. (Issued under Section 6 of the Indian Fisheries act of 1897)*

| | | |
|---|---|---|
| **Name of Licence** | : | SEYED ABSOTHALIR, S/O.V.M.SEENATHAMMAL |
| **Residence of licence** | : | NAMBUTHALAI |
| **No. of fixed engines Permitted** | : | SIX |
| **Locality** | : | SEA OF NAMBUTHALAI |
| **Period** | : | 1-7-1943 to 30-6-1944 |
| **Dated** | : | 2-11-1943 |

Sd /-

Asst. Director, 2-11-1943

Pearl and Chank Fisheries.

1) தொண்டிக்கு நேர் கிழக்கு 7¼ பாகம் நடுக்கட்டை ...1

2) வலசப்பட்டினத்திற்கு நேர் கிழக்கு 6½ பாகம் கோயில் கட்டை ...1

3) காரங்காட்டுக்கு நேர் கிழக்கு 3½ பாகம் பொன்னுமரம் ...1

4) தீர்த்தண்டி தானத்திற்கு நேர் கிழக்கு 3½ பாகம் நல்லாமரம் ...1

5) பட்டி முனைக்கு நேர் கிழக்கு 5 பாகம் சில்லாமரம் ...1

6) மேற்படி மரத்திற்கு நேர் கிழக்கு 5 3/10 பாகம் தரவுக்கட்டை மரம் ...1

*(இங்கு குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் கச்சத்தீவு அடங்குகிறது)*

*(இதை அளித்தவர் : திருமதி ASK. அபிதம்மா, கிழக்குவீதி, நம்புதாழை, இராமநாதபுரம் மாவட்டம்)*

## பிற்சேர்க்கை - 5

### இராமேஸ்வரம் சப்ரிஜிஸ்தராபீஸ்
### எண் 278/1948 / 26-7-1948

1947ம் வருஷம் டிசம்பர் மாதம் 2 இராமநாதபுரத்திலிருக்கும் ஸ்ரீ ந.முத்துராமலிங்க சேதுபதியவர்கள் குமாரர் மரவ ஜாதி ராஜாங்க அந்தஸ்து இராமநாதபுரம் ராஜா ஸ்ரீ ஆர்.ஷண்முக ராஜேஸ்வர சேதுபதியவர்களாகிய நாகநாத சேதுபதியவர்கள் பவர் பெற்ற திவான் ஸ்ரீ வி.பொன்னுச்சாமி பிள்ளையவர்கள் 1-வது பார்டியாகவும் .................. லிருக்கும் ஜனாப் ............................ பிள்ளை மகன் கே.எஸ். முகம்மது மீராசா மரைக்காயர் 2-வது பார்டியாகவும் எழுதிக்கொண்ட குத்தகை தெஸ்தாவேசு.

1. 1-வது பார்டியவர்களின் சமஸ்தானத்துக்குப் பாத்தியமான சமஸ்தானம் அனுபவத்திலிருக்கும் அடியில் கண்ட தீவின் 1356-ம் பசலி முதல் 1358-ம் பசலி முடிய குத்தகையை 2-வது பார்டி 1-வது பார்டியவர்களின் தாசில்தாரிடம் பசலி 1க்கு ரூ.23.2.0 வீதம் ஒப்புக்கொண்டும் அதன் விஷயமாய் ஏற்பட்ட நடவடிக்கையின் பேரில் 1-வது பார்டியவர்களின் தாசில்தாரிடம் பசலி 1க்கு ரூ.23.2.0 வீதம் ஒப்புக்கொண்டும் அதன் விஷயமாய் ஏற்பட்ட நடவடிக்கையின்பேரில் 1-வது பார்டியவர்களின் (Huzur Roc.E4. 10314/42, Dt. 15-2-1947 No Proceedings) மூலம் அப்ரூவல் ஆர்டர் பிறப்பிவிக்கப்பட்டிருக்கிறது. ஷி பசலிக் குத்தகைத் துகை ரூ.69.6.9வும் 2-வது பார்டியால் 1-வது பார்டியின் இராமநாதபுரம்

தாலூக்கா கஜானாவில் 30-1-1947 தேதி 141820 செலான் மூலம் இருசால் செய்யப்பட்டிருக்கிறது.

2. அந்தப்படி அடியில் கண்ட தீவை 2-வது பார்டி 1-7-1946 முதல் குத்தகைக்கு அனுபவம் எடுத்துக்கொண்டிருக்கிறபடி 1-7-1947 தேதி பசலி 1க்கு ரூ.23.2.0 வீதம் 3 பசலிக்கு அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

3. குத்தகை பாத்யதையை 2-வது பார்டி 1-வது பார்டியவர்களின் அனுமதியன்னியில் வேறுயாருக்கும் **TRANSFER** செய்யக்கூடாது.

4. இவ்விதம் மேற்படி குத்தகை பாத்யதையை அனுபவித்துக் கொண்டு குத்தகை காலம் திகைவாகிற 1949ஆம் வருடம் ஜூன் மாதம் ஆகையறாக்கு எவ்விதப் பின் துயர்ச்சியுமன்னியில் 2-வது பார்டி 1-வது பார்டியின் தாலூக்கா தாசில்தாரிடம் ஒப்புவித்து விட வேண்டியது. இதன்படி 1-வது பார்டி எஸ்டேட்டிற்கும் 2-வது பார்டியும் அவரவர்களின் வாரிசுகளும் அவர் பாத்யதையை அடைகிறவர்களும் கட்டுப்பட்டு நடந்து வர வேண்டியது.

## சொத்து விபரம்

இராமநாதபுரம் ஜில்லா ராமேஸ்வரம் சப்-ரிஜிஸ்திரேஷனுக்கு தனுஸ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே இருக்கும் சமஸ்தானத்துக்குப் பாத்தியமான **கச்சத்தீவு.**

**பிற்சேர்க்கை - 6**

## ஆவணப்பதிவு அலுவலகச் சான்று

**Book : -** *"List showing the names of the Town and Villages constituting the several Registration subdistrict in the Registration Dt. of Ramanathapuram"*

(Corrected up to 1-1-1966)

(First Edition 1957)

(Published by Tamil Nadu Govt.)

**Page No.107**

*Rameswaram sub Dt.*

*Ramanathapuram Taluk*

*Ramanathapuram Zamindari*

1. **Dhanuskodi**

- *Kachca theevu (Hamlet)*

*Ramanathadai (Hamlet)*

II. **Kunja Valasai**

III. **Mandapam**

- *Maikundu (Hamlet)*
- *Manlipattu Theevu*
- *Manali*
- *Muyal Theevu*
- *Thoni thurai*

IV. **Maraikkayar Pattanam**

V. **Pamban**

- *Akkal madam*
- *Iyam thopu*
- *Kilakku*
- *Kurusadai theevu*
- *Kuthukal*
- *Munthal*
- *Nadu theevu*
- *Panamthopu*
- *Patharsal*
- *Palli theevu*

VI. **Rameswaram**

- *Ramasamy theevu*

பிற்சேர்க்கை - 7

## இலங்கை அரசின் அமைச்சரவைச் செயலாளர் கருத்து

*I remember coming across this problem when I was an Assistant Legal Draftsman. I had to deal with a file for the purpose of verifying some of the boundries of the Northern District. In the process of revising the draft proclamation, I had to trace the History of the boundary back over many years. I remember coming across a proclamation issued probably in the time of queen Victoria, in which Island of* ***Kachchativu is excluded from the Northern District as it belonged to the*** **RAJA OF RAMNAD.**

By. B.P.Pieris, (1966-May)
(Secretary of the Cabinet of Ceylon)
(Ceylon 'Daily Mirror' News)

பிற்சேர்க்கை - 8

**INDIAN EXPRESS - 9-5-1966.**

*Kachativu : Attention Drawn to old Document.*

**COLOMBO - MAY 8**

*A Former Secretary to the Ceylon cabinet Mr.B.P.Pieris has in an article published in the Ceylon "Daily Mirror" today said that he remembers coming across a proclamation issued probably in the time of Queen Victoria in which the island of Kachativu is excluded from the province or district (in the north) as it belonged to the Raja of Ramnad.*

*He says that he also remembers making a minute about this in the file. This would be about the period 1936-40.*

*He had come across this problem when he was an Assistant Legal Draftsman in charge of the drafting of subsidiary legislation.*

*He says the division of the island into provinces and districts is not done under any statutory power. It is done under the inherent powers of the crown by the Governor by proclamation. He had to deal with a fill in the legal draftsman's department varying some of the boundaries of a province or Revenue district of the north. In the process of revising the draft proclamation he says, he had to trace the history of the boundary over many years back and he remembers coming across this proclamation.*

பிற்சேர்க்கை - 9

**DECCAN HERALD**

*(Weekly Magazine, Dated 1.3.1970)*

*A deathly silence hangs over a small patch of land just one and a half square miles in area jutting a few feet above the blue Arabian Sea.* An occasional search of a wandering seagull and the lapping of the waves on the rocky shore are the only sounds that break the monotony of silence.*

*That is Kachativu, an uninhabited island 12 miles east of the famous temple town of Rameswaram on the Eastern Coast of India. Low thick shrubs occasionally broken by brushes of wild grass are the only flora that the island can boast of, There is no source of fresh water, a real case of 'Water Water everywhere, but not a drop to drink.'*

*There is just one building - if it can be called so-and a tiled one at that on the island. It houses the St.Antony's Church whose origin is a matter for conjecture. It is rumoured that about 50 or 60 Years ago, one Kuppu of Ramnad district while out fishing near the island ran into squally weather resulting in his boat capsizing. He was able to*

* தவறு : Bay of Bengal.

*reach the shore of this island with great difficulty and as a token of his gratitude he built this shrine in honour of St. Anthony, the Patron Saint of Travellers.*

**LOCATION**

*The shrine is at present located in this small tiled shed and houses two statues of St.Anthony and St.Sebastian (Patron Saint of fishermen). There is a giant cross and a mine foot pillar with the image of "Our Lady of Good Voyage," facing north just outside the shrine. Just in front of the shrine is a survey tower.*

*This was perhaps erected by Col.Walker and his assistant Major Branfield of the Survey Department in connection with their trignometrical survey of India in 1874, for, there is a reference to this island in their notes made on that occasion.*

*The island comes to life just once a year, for three days in March when pilgrims from India and Ceylon flock to the shrine and light candles. This is not merely a solemn religious occasion, for it is also an occasion when friends, relations even husbands and wives-residing in India and Ceylon meet without having to go through the formalities of passports, permits and P.Forms.*

*Historically speaking this little island seems to have come into the possession of the Rajahs of Ramnad as early as 1803 when the British conferred zamindari rights on him. Since then, the Raja of Ramnad has been successively leasing out this island in 1880, 1885 and again in 1892 for pearl diving, collection of chanks etc.*

*Such leasing out continued into the Twentieth Century also. In 1913 the Raja leased out the island on a long term*

*basis to the Government of Madras and this lease was renewed in 1948. Following legislation abolishing Zamindaries, these rights were permanently handed over to the Government in 1948.*

*Cartographically speaking also, there is little evidence to support the claim of Ceylon over this island. In a map which forms part of the book ' Ceylon' by Sir James Emerson Tennant published from London in 1859, that country is said to lie between latitudes 5°55' and 9°51' North and longitude 79° 41'40" and 81°54'50" East.*

*If that is so, Kachathivu lies outside these references. In the same book, there is yet another map of Ceylon according to ptolemy and pliny, which also does not show this island as part of Ceylon, though Delft or Nedunthivu is clearly shown.*

*In terms of Revenue records of the Madras Government, there is definite evidence of Kachathivu being part of the State. The island was surveyed in 1956 and was included as a part of Rameswaram in survey No.1250. Earlier, in 1952, in a survey map produced by the Survey Department on the basis of earlier maps of 1895 and 1930, the island is very definitely shown as part of India.*

*Despite the overwhelming evidence of India's rights over the island, the Government of India seems to be rather hesitant about claiming ownership. In fact, on March 1, 1968, Mr.B.R.Bhagat, the Minister of State for External Affairs, told Parliament amidst shouts of 'Shame, Shame' from the Opposition, that neither India nor Ceylon had de jure possession of the island.*

**POSSESSION**

*Apart from the question of de jure possession, pilgrims returning from the island during the last two years have been bringing with them stories of which indicate that Ceylon has been*

*quite uninhibited in its de facto take over of the island. Customs and Politic officials of Ceylon have unabashedly set up their shed on the island and have been making their authority felt among the pilgrims.*

*A ship of the Ceylon Navy has been anchoring off the island and naval ratings and officers have been coming ashore. Aircraft of the Ceylon Air Force have been brazenly flying over the island at low levels almost continuously.*

*On the other hand, not a single Indian official visited the island and neither the Indian Navy nor the Indian Air Force evinced any interest in the area. The Indian pilgrims were left to the tender mercles of the Ceylon officials who reportedly threatened Indian traders and took away some of their belonging.*

*There is much resentment among Indian pilgrims over this sorry state of affairs and there is genuine apprehension that this year when the annual festival takes place on March 5, Ceylon's hegemony over this little piece of land would be complete and that in effect India would be handing over this piece of territory to Ceylon gratuitously. Many people feel that perhaps viewed from Delhi, this is only just yet an other piecs of uninhabited territory where "not even a blade of grass grows."*

**பிற்சேர்க்கை - 10**

**இராமநாதபுரம் கெசட்டியர் (1972)**

(பக்கம் - 30)

**Kacha Theevu :-** *Kacha Theevu lies 10 miles north east wards of Rameswaram. The Raja of Ramanathapuram was leasing this Island to private persons before the abolition of the Zamindari. Fisherman frequent this Island for fishing. The Island is so named because of the Kacha (dirty) water in it. The survey number of Kacha Theevu is 1250 and its extent 285.20 acres.*

*There is a Roman Catholic Church on it and the Father of Thangachimatam pays a visit and conducts a mass in the Church. This Island lies within the jurisdiction of the karnam of Rameswaram.*

- இது தமிழக அரசு ஆவணக் காப்பக வெளியீடு.

## பிற்சேர்க்கை - 11

வீரகேசரி (5-4-1972)

### "ஆஹா ! ஹோர்லிக்ஸ் தரிசனம் கண்டேன்"

நெடுந்தீவிற்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் அமைந்திருக்கும் கடத்தலுக்குத் துணையான பிரதேசமென அரசாங்கத்தாரால் கருதப்படுவதும் இலங்கை-இந்திய அரசுகளுக்கு இடையே சர்ச்சைக்குரியதுமான 285 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட கச்சத்தீவு முன்னர் வளமிக்க ஒரு பிரதேசமாகவே இருந்திருத்தல் வேண்டும். இது பண்டைக்காலத்தில் விவசாயம் செழித்து வளர்ந்த பூமியாக இருந்துள்ளதற்குச் சான்றாக இன்றும் வயல் நிலங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. மத்தியில் மண்ணைக் கொண்ட இதன் கிழக்குப் பகுதி பார் படர்ந்த பிரதேசமாகும். கல்லுமலை என அழைக்கப்படும் இந்தப் பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 20 அடி உயரமுள்ளது. தூண்டிற்கற்களைப் போன்று காணப்படும் இவற்றிடையே சிறிதும் பெரியதுமான குழிகளைக் காணலாம்.

மழைநீர் தேங்கி நின்றதால் கிணறென வர்ணிக்கப்பட்ட 2 அடி ஆழம் மிக்க அந்தக் குழியை நான் பார்த்தபோது தற்போது நிலவும் வரட்சி காரணமாக குழியின் அடித்தளம் வெடித்துக் காணப்பட்டது. கல்லுமலை எனக் கூறப்படும் அந்தப் பகுதியில் கூடுதலான ஆழமுடையது இந்தக் குழி மாத்திரமே.

இதனை அடுத்து 3 அல்லது 4 உயர்ந்த வெண்மணல் திட்டுகள் உள்ளன. மண்மலை எனச் சொல்லப்படும் இத்திட்டுக்களில் பெரியது கடல்மட்டத்திலிருந்து சுமார் 65 அடி உயரமுடையது. இதன் உச்சியில் நின்றுபார்ப்பின் அந்தச் சிறு தீவகத்தின் அமைப்பைவும் இராமேஸ்வரம் கோயிலின் முடியையும் காண முடியும். யுத்த காலத்தின்போது இந்த மலையின்மீது இராணுவத்தினர் தங்கிப் பயிற்சி பெற்றதாகக் கூறப்படுகின்றது. சிதைந்த நிலையில் காணப்படும் சிமெண்ட் தளம் கச்சத்தீவில் இருந்த வெளிச்ச வீட்டிற்கான (Light House) சான்றாகும்.

ஒரு குறிப்பிட்ட எல்லை தவிர்ந்த கரையோரப் பகுதிகளில் மணலும், கடற்சல்லிகளும் நிறைந்துள்ளது. நடுப்பகுதியில் கிழக்குப்பகுதி போன்று பரந்த கற்பாறைகளைக் காணமுடியாதாயினும் ஊடே ஊடே கோளான் கற்களைப் படை படையாகக் காணக்கூடியதாகவுள்ளது. முன்னர் விவசாயம் செய்யப்பட்டுள்ளதால் கச்சத்தீவின் ஏதோ ஒரு பகுதியில் நன்நீர் இருக்க வேண்டும் என் நம்ப இடம் உண்டு.

புனித அந்தோணியார் ஆலயத்திலிருந்து சிறிது அப்பாலுள்ள புனித சூசையப்பர் ஆலயத்தின் சுற்றாடலில் நன்னீர் இருக்கலாமெனக் கருதப்படுகிறது. கச்சத்தீவின் மழை வீழ்ச்சி கணிசமான அளவு கூடுதலாகவே இருக்க வேண்டும். நாங்கள் அங்கு சென்றபோது பசுமையான புற்களைக் காணக்கூடியதாக இருந்தது. நமது ஊரில் காணக்கூடிய புல் வகைகளுக்கும் இவற்றிற்குமிடையே பலத்த வித்தியாசம் இருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது.

கடந்த 5.3.72ல் நாங்கள் நெடுந்தீவிலிருந்து காலை புறப்பட்டு மூன்றுமணித் தியாலத்தின் பின் அதாவது 10மணியளவில் கச்சத்தீவை அடைந்தோம். நாங்கள் கரையை அடைந்த ஒரு மணி நேரத்தின் பின்னர் **இலங்கைச் சுங்கப்பகுதியைச் சேர்ந்த சிலர் அங்கு வருகை தந்தனர். எந்த மதத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் ஒரு ஆலயத்திற்குள் நுழையும்போது அதற்குரிய கண்ணியத்துடன் செல்வது பொதுவான வழக்கம். ஆனால், எமது (இலங்கை) சுங்கப்பகுதியினர் துப்பாக்கிகள் சகிதம் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத்திற்குள் நுழைந்தது எமக்குப் பெரிதும் கவலையை அளித்தது.**

மதிய உணவின்பின் நாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது மூன்று இளைஞர்களும் நான்கு சிறுவர்களும் ஆலயத்திற்கு வந்து பிரார்த்தனை செய்தபின் எம்முடன் பேசினர். தமிழ்நாடு இராமேஸ்வரத்தைச் சேர்ந்த அந்த மீனவர்களின் உற்சாகமும் சுறுசுறுப்பும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. மார்சலின், அந்தோணிசாமி ஆகிய இளைஞர்களுடன் நான் மனந்திறந்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டேன். இவர்கள் எமக்குப் பல உதவிகளைச் செய்தனர். 7ஆம் திகதி புனித அந்தோணியார் உற்சவம் ஆரம்பமாகியது. இலங்கை யாத்ரிகர்களுக்கு 8ஆம் திகதி வரை நிம்மதியேயில்லை. இந்திய வர்த்தகர்கள் வந்து சேராமையே அவர்களின் கவலைக்குக் காரணமாகும்.

உற்சவம் ஆரம்பமாகும் திகதி பற்றிய சர்ச்சைகளையிட்டு எழுந்திருந்த நிலைமையினால் இந்தியர்கள் இம்முறை வராது விட்டு

விடுவார்களோ? கொண்டு வந்த பொருட்கள் யாவற்றையும் திருப்பிக் கொண்டு செல்ல வேண்டியேற்படுமோ? என்று மனம் புழுங்கியவர்கள் ஏராளம்.9ஆம் திகதி இந்திய மக்கள் வரத் தொடங்கியதும் இவர்களடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. வியாபாரம் நெருப்பாக நடக்கத் தொடங்கியது. தேங்காயெண்ணெயும் மற்றும் இலங்கைப் பொருட்களும் காஷ்மீர், காஞ்சிபுரமாகவும், பெட்ஷீட்களாகவும் மாறிக் கொண்டிருந்தன. விபரம் தெரியாதவர்கள் எண்ணெய் டின்களைக் கொடுத்துக் கல்சங்கிலி, மணிமாலை என்பனவற்றைப் பெற்றுக்கொண்டு திருப்தியுடன் திரும்பிய சம்பவங்களும் உண்டு. ''பொருளுக்குப் பொருள்'' இலங்கை-இந்திய மக்கள் வாயிலிருந்து அடிக்கடி உதிர்ந்த வார்த்தைகள் இவை. காசுக்குக் கச்சத்தீவில் அவ்வளவு மார்க்கட் இல்லை.

'கஸ்டம்ஸ் தொல்லைகள் பெரிய கரைச்சல். ஒண்டும் விடுறான்களில்லை'. 'ஒரு தேங்காய் எண்ணெய் டின்னும், ரோச் (டார்ச்) லைட்டும்தான் கொண்டுவந்தனான்' சுங்கப்பகுதியின் பரிசோதனைக்-குள்ளான ஒரு சிலரின் கவலைக் குரல் இவை. சாதாரண மக்களிலும் பார்க்க அதிகாரிகளே இம்முறை கூடுதலான பண்டமாற்றுச் செய்து திரும்பியவர்களாவர். கடந்த காலங்களிலும் பார்க்கக் கூடுதலான விலை இந்தியப் பொருளுக்கு ஏற்படக் காரணமும் இவர்களே. பேரம் பேசாது ஆரம்பத்தில் 2,3 தேங்காய் எண்ணெய் டின்களைக் கொடுத்து ஒரு சங்குமார்க் சாரம் வாங்கிய அதிகாரிகளையும் கண்டேன். இலங்கையில் காணக் கிடைக்காத ஹோர்லிக்ஸ் போத்தல்களை ஏராளமாக அங்கு கண்டு ரசித்தேன்.

**''இதென்ன? சூட்டிங் போல இருக்கு!'' 5 ஆம் திகதி (5.3.72) எமது கடற்படைப் படகுகள் கச்சத்தீவுக்கரையில் 'கஜபாகு' கப்பலைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்ததைப் பார்த்த திரு.மரியநாயகம் அவர்களின் நகைச் சுவை இது.**

நாம் கச்சத்தீவைச் சென்றடைந்ததும் எம்மை வரவேற்றது இலங்கை காக்கைகளா? இந்தியக் காக்கைகளா? என்னும் சர்ச்சையைத் தொடங்கிக் கச்சத்தீவுக் காக்கைகளே என இறுதித் தீர்ப்பளித்த ஹாஷ்ய மன்னர் இவர்.

**பிரச்சனைக்குரிய இந்தத் தீவகத்தின் வடக்குக்கரையில் நமது (இலங்கை) கடற்படைக் கப்பலும் படகுகளும் நங்கூரமிட்டிருந்தன. இந்தியக் கடற்படையைச் சேர்ந்த எந்தவொரு கப்பலும் நங்கூரமிடவில்லை.**

இலங்கை குடியரசாகும் பொழுது தனது திட்டவட்டமான எல்லையை உறுதிப்படுத்தும் பட்சத்தில் கச்சத்தீவின் பிரச்சனை தீர்க்கப்பட்டுவிடும் எனப் பொதுவாக நம்பப்படினும் தமிழக அரசு தனது ஆட்சிக்குட்பட்டது என்பதைத் தன் வெளியீடான தமிழரசு (பிப்ரவரி-16) இதழில் தெரிவித்துள்ளது. இதனைத் தமிழக இளைஞர் (திரு.முகம்மது அலி) ஒருவரிடமிருந்து குறித்துக் கொண்டேன்.

அறிவிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு ஓய்வு கிடைப்பதோ அரிது. கிடைக்கும் சிறிது நேரத்தையும் பயன்படுத்திவிட வேண்டும் என்பதால் எனது நோக்கத்தை நிறைவேற்றச் சற்றும் அலுப்பின்றி இயங்கிக் கொண்டிருப்பேன். மக்களிடத்தில்தான் எத்தனை பரபரப்பும் விறுவிறுப்பும். வியாபாரத்தை முடித்துக் கொண்டு விரைவில் புறப்பட்டுவிட வேண்டும் என்று விரும்பும் சாரார் ஒருபுறம். முன்பின் பார்த்தறியாதவர்களின் திடீர் உறவு புதிய சுகம் - இளசுகளில் இடித்துச் செல்வதில் உள்ள திருப்தி. ''பூ வைத்த பூவைக்குப் பூக்கள் சொந்தமா'' எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த இளைஞர் கோஷ்டியிலிருந்த ஒருவரின் முனுமுனுப்புப் பார்த்தேன். முன்னால் சென்று கொண்டிருந்த ஒரு அழகியின் தலையில் இருந்த மலர் அவர் கரத்துள் சிக்கிக் கசங்கிக் கொண்டிருந்தது. மலரைப் பறித்த இளைஞரின் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி ! எத்தனை பேரானந்தம் !! வண்டுகள்தான் மலரைத் தேடி விரையுமென்றால் மலர்களே வண்டுகளை நாடிச் சென்ற மரபிற்கு எதிரான வழக்கங்களையும் அங்கே காணமுடிந்தது.

பெர்லின் சுவர் அருகே பிரிந்துள்ள உறவினர்கள் விசேட தினங்களில் சந்தித்துப் பிரிவுத் துயரத்தைப் போக்கிக் கொள்வார்கள் என எங்கோ படித்த ஞாபகம். இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் இந்தத் தீவகத்தில் இரண்டு நாட்டிலுமுள்ள உறவினர்கள் சந்தித்துக் கண்ணீர் விட்டு அழுது பிரியும் காட்சி மனதை உருக்கிவிடும். ஆண்களும் சரி. பெண்களும் சரி சூழலை மறந்து தழுவுவதைக் காணும்போது அன்பும் உறவின் நெருக்கமும் எத்தனை வலுப்பெற்றது என்பதை உணர்ந்து கொண்டேன்.

இந்த இருநாட்டு உறவினர்கட்குமிடையே திருமணங்கள் நடப்பதுண்டு. இம்முறை திருமணம் நடந்தால் அந்த துரதிர்ஷ்டம் மிக்க தம்பதிகளைப் பற்றி அறிந்துவிட வேண்டுமென்று ஏற்கனவே முடிவு செய்திருந்தேன். எனது துரதிர்ஷ்டம் இம்முறை அப்படி ஒன்றும் இடம்பெறாது போய்விட்டது.

## *பிற்சேர்க்கை - 12*

### *"கச்சத்தீவு"*

*(கதிர். தணிகாசலம் - சைப் புலவர், "தாயகம்" உடுப்பிட்டி, இலங்கை)*

*இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கே 45 மைல் தூரத்தில் உள்ளது. இது இலங்கையின் வடக்கே உள்ள சிறு தீவுகளில் ஒன்றான நெடுந்தீவுக்குத் தென்மேற்காக ஏறத்தாழ 18 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. இராமேஸ்வரத்திலிருந்து வடகிழக்காக 12 மைல் தூரத்தில் உள்ளது. 'கச்சத்தீவு' என்று பெயர் வந்த காரணம், இங்கே ஆமைகள் அதிகம் உள்ளதனாலேயே. கச்சம் என்றால் ஆமை. தீவின் நீளம் 1 மைல், அகலம் ½ மைல். பாக் கடலின் நடுவே இருக்கும் இத்தீவு ஒரு வெறும்பாறையல்ல. பெருமை வாய்ந்த சித்த வைத்தியத்திற் பாவிக்கப்படும் உன்னத மூலிகைகளின் இருப்பிடம் இது. சாதாரண யாத்திரீகர்கட்குத் தெரிவது - இரண்டொரு புளிய மரமும், தென்னை, பனை , சிறிய புனித அந்தோணியார் கோவில் - தற்பார்கள், அவரைச் செடிகள் - இவைகள்தான். இன்னும் மனிதனுக்குத் தேவையானவை என்ன இருக்குமோ யாரறிவார்! இத் தீவின் மேற்குக் கரையோரத்திலிருந்து 100 யார் உள்ளேதான் ஒரேயொரு உயர்ந்த பாறை உண்டு. அதில் ஏறி நின்று பார்த்தால் மேற்கே இராமேஸ்வரம் கோவில் கோபுரங்கள் தெரியும். இப் பாறையின் அருகே பழைய டச்சுக்காரர் பீரங்கி ஒன்று கடலை நோக்கிய வண்ணம் துருப்பிடித்து மண்ணோடு மண்ணாகக் கிடக்கிறது. இதே பக்கத்தில்* ***சுமார் 22அடி உயரமுள்ள முறிந்த கம்பம் ஒன்றுண்டு. அது இந்தியக் கரையிலிருந்து வருபவர்களுக்காக வெளிச்சம் காட்டுவதற்காக உபயோகப்பட்டிருக்கலாம். இந்திய மண்ணில் உள்ள அக்கா மடம், தங்கச்சி மடத்திலுள்ள மீனவர்கள் இங்கே வந்து கருவாடு காய வைத்து ஏற்றிப் போவது இன்னும் நடைபெறுகிறதாம்.***

*இத்தீவில் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் 4 நாட்களளவில் புனித அந்தோணியார் கோவிலில் உற்சவம் நடக்கும். அதற்கு ஏராளமான யாத்திரீகர்கள் இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் இங்கு வந்து கூடுவர்.*


*சாராயம், தேங்காயெண்ணெய், சோப் வகை, தங்கம், வெள்ளி, கிராம்பு, ஏலக்காய், பாக்கு முதலிய பொருட்கள்*

இலங்கையிலிருந்தும் - சாரம், வேட்டி, சேலை, புற்பாய் வகை, சாமி படங்கள், பிளாஸ்டிக் வாளி, மின்சார உதிரிப் ்பாகங்கள், கைக்கடிகாரம், பேனா, வானொலிப் பெட்டிகள், சினிமா ஏறக்-கோர்ட்டுகள் முதலிய பொருட்கள் இந்தியாவிலிருந்தும் பண்டமாற்றுச் செய்யப்படுகின்றன.

இந்தத் தீவின் கிழக்குக் கரையில்தான் புனித அந்தோணியார் கோவில் உள்ளது. 1969ம் ஆண்டு தொடக்கம்தான் இருநாடுகளிலிருந்தும் பெரிய அளவில் யாத்திரீகர்கள் செல்லத் தொடங்கினர். காரணம், இவ்விருநாடுகளும் வெளிநாட்டுப் பயணிகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதித்தமையே. யாத்திரீகர்களிலும் பார்க்க பண்டமாற்றுச் செய்பவர்களும், பிரிக்கப்பட்ட குடும்பத்தினர் ஒருவரையொருவர் பார்ப்பதற்காக கூடுபவர்களுமே அதிகம். இங்குள்ள 'இந்திய பிரசாவுரிமைச் சட்டத்தினாலும், 'சிறிமா-சாஸ்திரி' ஒப்பந்தத்தினாலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் ஆயிரக்கணக்கானோர், மனைவியைப் பிரிந்த கணவனும், கணவனைப் பிரிந்த மனைவியும், பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளுமாக சட்டத்தினால் பிரிக்கப்பட்டவர்-கூடிப் பிரிவதை இங்கே காணலாம். இரண்டு நாடுகளுக்கும் பொதுவாக இத்தீவு இருப்பதால்தான் இது நடக்க முடிகிறது. உற்சவ நாட்களில் இந்தத் தீவு ஒரே சோகமயமாகவிருக்கும். ஆண்டுக்கொருமுறை ஆயிரக்கணக்கானோரின் கண்ணீர் மழையால் நனைக்கப்படுவது இத்தீவின் மண். ('U.N. Human Rights Commission', 'International Jurists Association') போன்ற நிறுவனங்களில் உள்ளோர் இங்கே வந்து பார்க்க வேண்டும். இவ்விரு நாடுகளிலுமுள்ள உயர் தலைவர்களும் வரவேண்டும். மனித உரிமைகள் எங்கே! என்பதும் புரியும்.

இது ஒருபுறமிருக்க, குடிபோதையில் மாடு வெட்டுபவரையும், ஆமை வெட்டுபவரையும்,மனித மிருகங்கள் சண்டை போடுவதையும் இங்கே இந்நாட்களில் கர்ணலாம் . பொதுவாக 'கச்சத்தீவு' 'துக்கத் தீவா' கவே காட்சியளிக்கும். சூழலினாலும், அரசியல் சூழ்ச்சிகளினாலும் வஞ்சிக்கப்பட்டு உருமாறிப்போன ஒரு சமுதாயத்தை, அதன் பல கோணங்களில், ஆண்டுக்கொருமுறை இங்கே நாம் சந்திக்கலாம்! தொல்லையில்லாமல்.

இத்தீவு மானிட சமுதாயத்துக்கே ஒரு சவால் என்றால் மிகையாகாது!


வங்காள விரிகுடா
தமிழ்நாடு
நாகப்பட்டினம்
கோடியக்கரை
அதிராம்பட்டினம்
பாக் நீரிணைப்பு
தொண்டி
யாழ்ப்பாணம்
அரபிக்கடல்
மண்டபம்
கச்சத்தீவு
இராமேஸ்வரம்
இலங்கை
இந்துமகா சமுத்திரம்

# கச்சத்தீவு

## வரலாற்று உண்மைகளில் சில

- தீவு உள்ள பகுதி சேதுசமுத்திரம். தமிழ்நாட்டுக்குரிய சேதுசமுத்திரத்தின் பகுதி சேதுநாடு. அதன் அரசர்கள் தாம் சேதுபதிகள்.
- 1609ல் மன்னார்வரை சேதுபதிகட்கு உரிமையாக இருந்தது எனச் செப்பேடு உள்ளது. கம்பெனியின் வேண்டுகோளைப் புறக்கணித்து சேதுபதி அரசின் உரிமையை (இஸ்திமிரார் சனத் உடன்பாட்டின்படி) ஆங்கில அரசு ஏற்றது. விக்டோரியா பேரரசியாரும் இதனை உறுதிப்படுத்தினார்.
- 23-6-1880, 4 12-1885, 1947 ஆம் ஆண்டு ஆவணங்களும் (எண். 510/80, 134/1885) கடிதங்களும், 1911 ஆம் ஆண்டின் சமஸ்தானப் பட்டியலும் 21-10-1921 கொழும்புப் பேச்சு வார்த்தையும் சேதுபதி அரசின் உரிமையை உறுதிப்படுத்துகின்றன.
- 1954 இன் இலங்கை சர்வேப்படத்தில் தீவு இல்லை. 1957, 1966 ஆண்டின் இராமநாதபுர ஆவணப் பதிவு ஏடுகளில் தனுஷ்கோடியின் உட்கிராமமாகக் கச்சத்தீவு, இராமனாதான். இரண்டு பகுதிகள் குறிக்கப்படுகின்றன.
- இராமநாதபுரம் அருகிலுள்ள நம்புதாளைக்காரர்தான் தீவு அந்தோணியார் கோயிலைக் கட்டினார்.
- இன்னும் பல உண்மைகளைக் கேட்க கருத்தரங்குக்கு வருவீர்!

அம்பிகா பிரஸ், ஈரோடு.



# கச்சத்தீவுக் கருத்தரங்கு

## அழைப்பு.

இடம்: பெரியார் மன்றம், ஈரோடு.

நாள்: 30—6—1974 ஞாயிறு காலை 10 மணி
மாலை 5 மணி

அனைவரும் வருக! அரும்பயன் பெறுக!

கருத்தரங்குக் குழுவினர்,
52, பிரப் ரோடு, ஈரோடு.

தந்தி: Kachcha Theevu, ERODE.

## கச்சத்தீவுக் கருத்தரங்கு

பெரியார் மன்றம்

காலை நிகழ்ச்சி: 30—6—74 ஞாயிறு காலை 10 மணி


| | | |
|---|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | புலவர் வை. நடேசன், B. A., |
| வரவேற்புரை | : | திரு. E. A. மதார்சா, M. C. |
| அறிக்கை வாசித்தல் | : | புலவர் செ. இராசு |
| கருத்தரங்கைத் தொடங்கி வைத்தல் | : | திரு. க. ர. நல்லசிவம் |
| செய்திக் காட்சி திறத்தல் | : | டாக்டர். கே. எம் ஏ. வகாப், திண்டிவனம் |
| தலைமையுரை | : | பேராசிரியர். எஸ். கிளமெண்ட், M. A. மதுரை |
| கருத்துரை வழங்குதல் | : | திரு. P. A சாமிநாதன், M. P., |
| | | திரு. M. சுப்பிரமணியம், B. A., B. L., M. L. A., |
| | | திரு. மு. அம்பலவாணர், Bar-at-Law. இலங்கை |
| | | திரு பெரியகுளம் அப்துல் ரகிமான், இராமநாதபுரம் |
| | | திரு ஆர். இராமமூர்த்தி, கோவை |
| | | திரு திருமலைராசன், B. A., B. L., |
| | | திரு சி. அம்பாயிரம், M. C., |
| | | திரு த. ஆ. இளமுருகன், B. com., (Final) |
| தலைவர் தொகுப்புரை | | |
| நன்றி நவிலல் | : | திரு. V. மாரப்பன், B. SC., |

மாலை நிகழ்ச்சி:

30—6—74 ஞாயிறு மாலை 5 மணி

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | திரு. ப. ச. விசுவநாதன், M. C., |
| தலைமையுரை | : | டாக்டர் இரா. சனார்த்தனம், M. A., P.hd., சென்னை |
| கருத்துரை வழங்குதல் | : | திரு. மு. சின்னசாமி, M. L. A. |
| | | திரு. நாரண துரைக்கண்ணன், சென்னை |
| | | பேராசிரியர் தி. வை. சொக்கப்பா, சேலம் |
| | | திரு. நா. இலட்சுமணராசா, இலங்கை |
| | | பேராசிரியர் இலக்குமி நாராயணன், M. A., மதுரை |
| | | திரு. ஏ. என். சாமி கோவை |
| | | திரு. பி எஸ். பாண்டியன, B. A., B. T., |
| | | திரு. த. விசுவநாதன் |
| | | திரு. K. ராமதாஸ், M. A., |
| தீர்மானங்கள் | | |
| தலைவர் தொகுப்புரை | | |
| நன்றி நவிலல் | : | புலவர் இரா. சி. சென்னியப்பன் |


A L K B A Y
Amanaka Munai
to Moveliturai
DELFT ISLAND
JAFFNA
Kachcha Tivu
Kachcha Tivu South
Mandapam
Mandapam Camp
Pāmban
Olaikuda
Rāmeswaram
Pāmban Island or Rāmeswaram Island
RĀMANĀTHAPURAM
Pumurichan Tivu
RĀMANĀTHAPURAM
Koyi Tivu
Shingle Tivu
RĀMANĀTHAPURAM
Landmark
Manalli Tivu
RĀMANĀTHAPURAM
Musal Tivu
Dhanushkodi



TIRUCHCHIRĀPPALLI
Kumbakonam
Kāraikāl
Tranquebar
Nāgappattinam
Pudukkottai
Ālangudi
Vedāranniyam
Point Calimere
Kāraikkudi
Puduvayal
Sivaganga
Topdi
PALK STRAIT
PALK BAY
Coromandel
Point Pedro
Kovilan Point
Karai Tivu
Analai Tivu
Velanai
Punkudi Tivu
Mandai Tivu
JAFFNA LAGOON
Delft I
Kachcha Tivu
Kakara Tivu
Devil's Point
Chempiyanpattu
Pāmban Island
Mandapam


தீவுக்
கருத்தரங்கு


கச்சத்தீவுக்
கருத்தரங்கு


கச்சத்தீவுக் கருத்தரங்கு



கச்சத்தீவுக்
A.T.ராஜ்


கச்சத்தீவுக் கருத்தரங்கு


கருத்தரங்கு


கருத்தரங்கு


தீவுக் கருத்தரங்கு




வெளியீடு
கொங்கு ஆய்வு மையம்
பி-4, பல்கலைக்கழகக் குடியிருப்பு
தஞ்சாவூர் 613 005.